பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 05 சனிக்கிழமை (17-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:144

# டக்ளஸை அமைச்சராக்கி தமிழினத்தை அவமானப்படுத்தி விட்டார் ஜனாதிபதி!

## தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழு பலத்த கண்டனம் சமாதான முயற்சிகள் பற்றியும் சந்தேகம் தெரிவிக்கிறது

கொழும்பு,ஏப்ரல்17

**பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக, தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந் தாவை தமிழ் மக்களின் நலன்களுடன் சம்பந்தமுடைய அமைச்சராக்கிய தன் மூலம் தமிழினத்தை அவமானப்படுத்திவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இப்படி அவரை வன்மையாகக் கண்டித்திருக்கிறது தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு.**

**நிதானமான சமாதான முயற்சிகள் சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக் கைகளை எடுப்பாரா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்திவிட்டார் ஜனாதிபதி என்றும் தமிழ்க் கூட்டமைப்பு அவர் மீது குற்றம் சுமத்திக் கண்டனம் தெரி வித்திருக்கிறது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டம் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சமபந்தன் தலைமையில் நடைபெற் றது.

இந்தக் கூட்டத்தில் சிவாஜிலிங் கம், என்.ரவிராஜ், செல்வம் அடைக் கலநாதன், ஜெயானந்தமூர்த்தி ஆகி யோர் தவிர ஏனைய 18 எம்.பிக்க ளும் கலந்துகொண்டனர்.

சிவாஜிலிங்கமும், ரவிராஜூம் இந்தியா சென்றிருப்பதால் கூட்டத் துக்குச் சமுகந்தரவில்லை என்றும், மட்டக்களப்புக்குச் சென்றிருந்த அடைக்கலநாதனும் ஜெயானந்த மூர்த்தியும் அப்போதுதான் கொழும் புக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார் கள் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

எதிர்வரும் 20ஆம் திகதி (செவ் வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்திப்பது என்றும் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டது.

புதிய சபாநாயகர் தெரிவு, அரச மைப்பு நிர்ணயசபை ஆகிய விடயங் கள் குறித்தும் கூட்டத்தில் ஆராயப் பட்டது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை புலி களின் தலைமையோடு கலந்தாலோ சனை செய்த பின்னர் - எதிர்வரும் 22ஆம் திகதி (வியாழக்கிழமை) நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் - காலையில் மீண்டும் தமிழ்க் கூட்ட மைப்பு எம்.பிக்கள் ஒன்றுகூடி இந்த விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர் மானம் மேற்கொள்வது என்றும் நேற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகத்தில் கைதானவர் மெதடிஸ்த போதகர் அல்லர்

### பொலீஸார் நீதிமன்றில் திருத்த அறிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.நகரில் வேம்படிப் பகுதியில் அமைந்துள்ள மெதடிஸ்த தேவாலய சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் தங்கி யிருந்த இரு சிறுவர்களை, தகாத முறையில் ஓரினச் சேர்க்கையில் ஈடு படுத்த முயன்ற சம்பவத்தில் சந்தே கத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட வர் போதகர் அல்லர். அவர் இல்லத் தின் உதவிக் காப்பாளரே என்று அறி விக்கப்பட்டுள்ளது.

யாழ்.பொலீஸார் யாழ்.நீதிமன் றத்தில் நேற்றுப் பிற்பகல் தாக்கல் செய்த தொடர் திருத்த அறிக்கையில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட் டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்ட சொலமன் வின்சன்ட் என்ப வரை மெதடிஸ்த திருச்சபையின் போத கர் எனத் தெரிவித்து 'பி' அறிக்கை மூலம் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் யாழ். பொலீஸார் நேற்றுமுன்தினம் மாலை ஆஜர்செய்திருந்தனர். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட நபர் மெதடிஸ்த சபையின் போதகர் அல்லர் என்றும் அவர் அந்த இல்லத்தின் உதவிக்காப் பாளரே என்றும் நீதிமன்றத்தின் கவ னத்துக்கு நேற்றுக் கொண்டு வரப் பட்டது.

அதனைத் தொடர்ந்து இது பற்றி அறிந்து உடன் அறிக்கை சமர்ப்பிக் கும்படி மேலதிக நீதிவான் யாழ். பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

அதனை அடுத்து தொடர் திருத் திய அறிக்கை ஒன்றை யாழ். பொலீ ஸார் மேலதிக நீதிவான் முன்னிலை யில் நேற்றுப் பிற்பகல் சமர்ப்பித்தனர்.

சம்பந்தப்பட்டவர் போதகர் அல் லர் என்றும் அவர் சிறுவர் இல்லத் தின் உதவிக் காப்பாளர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முகாமைக் குருவும் தகவல்**

இதேவேளை,

மெதடிஸ்த திருச்சபையின் யாழ் சேகர முகாமைக்குரு அருட்திரு கருண சேகரா உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

16-04-2004 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பாக கீழ்க்காணும் திருத்தத் தைத் தெரிவிக்க விரும்புகிறோம். சந் தேகத்துக்கிடமாக கைது செய்யப்பட்ட சொலமன் வின்சன்ட் என்பவர் மெத டிஸ்த திருச்சபையின் போதகரோ, பணியாளரோ அல்லர். இவர் சிறுவர் இல்லத்தில் உதவிக் காப்பாளராக பணியாற்றியவர் என்பதை உறுதியா கத் தெரிவிக்கிறோம் - என்றுள்ளது.

(அ-3)

## யாழ்.நகர் மத்தியில் கிணற்றிலிருந்து ஆண்கள் இருவரின் சடலங்கள் மீட்பு!

### ஒரு சடலம் அடையாளம் காணப்பட்டது; மக்களிடையே பரபரப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். நகரின் மத்தியிலுள்ள வின் ஸர் தியேட்டரின் பின்புறம் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து நேற்று மாலை இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனால், நகரில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கொலை செய்யப்பட்ட பின்னர் இரு சடலங்களும் கிணற்றில் வீசப் பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந் தேகிக்கின்றனர்.

சடலங்களில் ஒன்று கந்தர்மடம் அன்னசத்திர லேனைச் சேர்ந்த நட ராசா சத்தியலிங்கம்(வயது 44) என்ற குடும்பஸ்தருடையது என அடையா ளம் காணப்பட்டுள்ளது.

மற்றய சடலம் அடையாளம் காணப்படவில்லை. அச்சடலத்தில் நீல நிற சேட் மட்டும் காணப்பட்டது. இரண்டு சடலங்களிலும் பரவலாக இரத்தக் காயங்கள் காணப்பட்டதுடன் அவை ஓரளவு உருக்குலைந்தும் இருந்தன.

வின்ஸர் தியேட்டர் வளாகத்தி லுள்ள கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசியதனை தியேட்டர் கட்டடத்தில் இயங்கிவரும் சதோச நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் நேற்றுக் காலையில் அவதானித்துள்ளார். இது தொடர்பாக உடனடியாக அவர் யாழ். பொலீஸில் முறைப்பாடு செய்தார். அங்கு சென்ற பொலீஸார் கிணற்றிலி ருந்து இரு சடலங்களையும் மீட்டனர்.

சடலங்கள் மீட்கப்பட்ட கிணறு கொங்கிறீட் பிளாட்டினால் மூடிக் கட் டப்பட்டு தண்ணீர் அள்ளுவதற்கான பாதை மட்டும் கொண்டுள்ளது. கிணற் றினுள் ஒரு சோடி செருப்பு மற்றும் சிகரெட் பெட்டி என்பனவும் நீரில் மிதந்து காணப்பட்டன.

(14ஆம் பக்கம் பார்க்க)



மீட்கப்பட்ட சடலங்கள்

(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## நீர்வேலி நபர் தமிழகத்தில் படுகொலை!

யாழ்ப்பாணம்,ஏப்.17

நீர்வேலியில் இருந்து 1996 ஆம் ஆண்டு தமிழகம் சென்று அங்கு வாழ்ந்து வந்த இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு சவுக்குமரக் காட்டில் வைத்துப் படுகொலை செய் யப்பட்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முத்துக் காடு என்னும் இடத்தில் கடை நடத்தி வந்த தங்கராசா தவசுதன் (வயது 30) என்பவரே படுகொலை செய்யப்பட்ட வராவார்.

கடந்த 14ஆம் திகதி இரவு 8 மணியளவில் பிரஸ்தாப இளைஞன் தனது கடையில் வியாபாரத்தில் ஈடு பட்டுக்கொண்டிருந்தார். அச்சமயம் அங்கு வந்த குழு ஒன்று அவரைக் கடத்தி சவுக்குமரக் காட்டுக்குக் கொண்டுசென்றது.

அங்கு வைத்து அவரை அடித்துத் தாக்கிய அக்குழு அவருக்கு நஞ்சைப் பருக்கியுள்ளது. மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமா னார்.

(ம-3)

## ஜே.வி.பிக்கு ஆற்றுப்படுக்கை அமைச்சு?

கொழும்பு,ஏப்.17

ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி அமைச்சை ஜே.வி.பியினருக்குக் கொடுப்பதன் மூலம் இப்பொழுது முறுகல் நிலைக்குள்ளாகியுள்ள ஜே. வி.பி - சுதந்திரக்கட்சி உறவைச் சீர் செய்து கொள்ள ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க முன்வரக்கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் கரு தப்படுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேசிய அரசில் நாட்டம்; ரணில் தனி அரசு அமைக்க ஆயத்தம்!

### ஜே.வி.பி. குழப்பத்தால் தோன்றியுள்ள புதிய சூழ்நிலை

அமைச்சுப் பதவிகளை துருப்புச் சீட்டாக வைத்துக்கொண்டு சுதந்தி ரக் கூட்டமைப்பில் ஜே.வி.பி. ஏற் படுத்தியுள்ள குழப்பநிலையால் புதிய அரசியல் சூழல் ஒன்று தோன்றியுள் ளது. பிரச்சினை கொடுக்கும் ஜே. வி.பியை உதறித்தள்ளிவிட்டு ஐக் கிய தேசிய முன்னணியை அணைத் துத் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டம் கொண்டுள்ளார்.

அதேவேளை - முன்னாள் பிரத மரும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க புதிய அரசியல் சூழலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சுதந்திரக் கூட்டமைப்பினர் சிலரையும் தம்முடன் சேர்த்து தாமே தனி அரசு ஒன்றை அமைப்பதற்கான ஆயத்தப் பணிக ளில் இறங்கியிருக்கிறார்.

ஜே.வி.பியின் கெடுபிடிகளையும், கடுமையான நிபந்தனைகளையும் ஆரம்பக் கட்டத்திலேயே முறியடிக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## கோட்ட அலுவலகங்கள் மூலம் மட்டு, அம்பாறை மாவட்டங்களில் புலிகளின் அரசியல் பணி மீண்டும்

மட்டக்களப்பு,ஏப்.17

விடுதலைப் புலிகள் நேற்று முதல் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங் களில் தமது கோட்ட அலுவலகங்கள் மூலம் அரசியல் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இ. கௌசல்யன் பணியாற்றுகிறார். அம் பாறை மாவட்டம் - த.குயிலின்பன், பட்டிருப்புக்கோட்டம் - செல்வா, மாவடி முன்மாரிக்கோட்டம் - உதயராஜ், மட் டக்களப்பு நகரம் - இ.சேனாதிராஜா, குடும்பிமலைக்கோட்டம் - தவன், அன் டான்குளக் கோட்டம் (வாகரை)

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கம்யூனிஸ்ட், சமசமாஜ கட்சிகளைப் போல் சுதந்திரக் கட்சி எம்மையும் நடத்தமுடியாது

## அனுரா வீட்டில் நடந்த கூட்டத்தில் ஜே.வி.பி. சீற்றம்

கொழும்பு,ஏப்.17

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருந்த உட்பூசலை தீர்த்துக்கொள்ளும் விதத்தில் கூட்டமைப்பிலுள்ள சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. முன்னணி உறுப்பினர்கள் சிலர் கூடி சமரசத்திட்டம் ஒன்றை தயாரித்திருக்கிறார்கள்.

கூட்டமைப்பில் ஏற்பட்டிருந்த உட்கட்சிப் பூசலின் எதிரொலியாகவே கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை பதவியேற்பு வைபவத்தை ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரித்திருந்தனர்.

இரு கட்சிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் தீர்மானம் எடுக்கும் குழுவொன்று நிறுவப்படாமை குறித்து ஜே.வி.பியினர் கவலை கொண்டிருந்தனர்.

'செயற்பாட்டுக்குழு' என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்த இக்குழுவே அமைச்சர்களின் நியமனங்கள், அமைச்சர்களின் கடமைப் பொறுப்புக்கள், அரச நிறுவனங்களின் முக்கிய அதிகாரிகளின் நியமனங்கள் போன்ற விடயங்களில் தீர்மானம் எடுப்பதாக இருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால், இந்தக் குழு எடுக்கவேண்டிய தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்துவிட்டார் என்றவகையில் ஜே.வி.பியினர் ஆட்சேபம் கிளம்பியிருந்தனர்.

இப்பொழுது மேற்குறித்த செயற்பாட்டுக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

புதுவருட தினத்தன்று அனுரா பண்டாரநாயக்க வாசஸ்தலத்தில் ஜே.வி.பி. உறுப்பினர்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்னணி உறுப்பினர்களுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஒரு சந்திப்பில் கலந்து கொண்டதாகவும் அச்சமயம் செயற்பாட்டுக்குழுவை நிறுவாது விட்டமைக்காக ஜனாதிபதியையும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவையும் அவர்கள் கண்டித்தனர் என்றும் கூறப்பட்டது.

"எங்களைப் பொறுத்தவரை இந்தக் குழுதான் எல்லாவித முக்கிய தீர்மானங்களையும் எடுக்கவேண்டும். ஆனால், இதற்கு மாறாகவே எல்லாம் நடைபெற்றுள்ளன" என்று ஜே.வி.பி. தலைவர்கள் கூறினர் எனத் தெரிய வருகின்றது.

1970ஆம் ஆண்டு ஐக்கிய இடதுசாரி முன்னணி அரசைக் கொண்டு நடத்துவதற்கு கொள்கைத் திட்டமிடல் குழுவொன்று உருவாக்கப்படும் என்று கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது. ஆனால், அவ்வாறான குழுவை அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க நியமிக்கவில்லை. "கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளைப் போன்று நாங்களும் நடத்தப்படுவதற்கு நாம் தயாராய் இல்லை" - என்று ஜே.வி.பி. பிரமுகர் கே.டி.லால் கந்த, அனுரா பண்டாரநாயக்க இல்லத்தில் நடந்த கூட்டத்தில் சீற்றத்துடன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அனுரா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமநாயக்க, மங்கள சமரவீர முதலியோரும், ஜே.வி.பி. தரப்பில் நந்தன குணதிலக்க, அனுரா திஸ்ஸநாயக்க, விமல் வீரவன்ஸ, கே.டி. லால்கந்த ஆகியவர்களும் கலந்து கொண்டனர். (ப)

# கருணா குழுவினரின் கொள்ளைச் சுவடுகள்!

ஏறாவூர்,ஏப்.17

செங்கலடி பிரதான வீதியில் உளள இரண்டு கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுளளன என்று ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நகைக்கடையொன்றும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றும் கொள்ளையடிக்கப்பட்டதால் 47 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகப் பொலீஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கடை உரிமையாளர்கள், செங்கலடியைவிட்டு வெளியேறுமாறு கருணா குழுவினரால் வற்புறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தனர். வற்புறுத்தலின் பேரில் கடைத் திறப்புக்களை கருணா குழுவினரிடம் ஒப்படைத்துவிட்டே சென்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் மீண்டும் மட்டக்களப்புக்குத் திரும்பிவருமாறு புலிகள் அறிவித்ததைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையான வர்த்தகர்கள் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு வந்திருந்தனர்.

இந்த வர்த்தகர்கள் தமது கடைகளைச் சென்று பார்த்தபோது பொருள்கள் யாவும் சூறையாடப்பட்ட நிலையிலும் கடைகள் சேதமாக்கப்பட்ட நிலையிலும் இருக்கக் கண்டனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தமது சொத்துக்கள் சூறையாடப்பட்டிருப்பது பற்றி முறைப்பாடு செய்துவருகின்றனர். (க)

# சாரதிகள் வரவில்லை ரயில் சேவைகள் பாதிப்பு

சிங்கள, தமிழ்ப் புத்தாண்டையொட்டி விடுமுறையில் சென்ற ரயில் சாரதிகள் வேலைக்குத் திரும்பி வராததால் நேற்றுமுன்தினம் சேவைகளில் ஈடுபடவிருந்த சுமார் 40இற்கும் அதிகமான ரயில்கள் இப்போது சேவைகளில் ஈடுபடவில்லை என ரயில்வே அதிகாரசபை தெரிவித்துள்ளது.

புத்தாண்டு விடுமுறையை அடுத்து கடமையைத் தொடங்க வேண்டிய கடந்த புதன்கிழமையன்றிலிருந்து இந்த நிலை தொடர்கின்றது என ரயில்வே அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ரயில்வே சாரதிகளுள் நூற்றுக்கு 70 சதவீதமானோர் இன்னும் கடமைகளுக்குத் திரும்பாமையினால் நேற்றுப் பல ரயில் சேவைகள் தடைப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளதால் மக்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகியிருப்பதுடன் தூர இடங்களிலிருந்து வேலைக்குச் செல்லும் பலர் மிகவும் பாதிப்படைந்துள்ளனர் என்றும் இன்னும் ஓரிரு நாள்களில் ரயில் சேவைகள் வழமைபோல் நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் ரயில்வே அதிகார சபை தெரிவித்துள்ளது.(க)

# சபாநாயகர் தெரிவில் ஹெல உறுமய இன்னும் எதுவித முடிவும் இல்லை

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் பதவி தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய இதுவரை எதுவித முடிவும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சபாநாயகர் ஒருவரை நியமிப்பதற்கும் இன்னும் சில நாள்கள் உள்ளன. அந்த விடயம் தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகிறோம்" என்று கட்சியின் ஊடகப் பேச்சாளர் அத்துருளிய ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐக்கிய தேசிய முன்னணி முன்மொழியும் உறுப்பினருக்கு ஆதரவு வழங்குவதா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்மொழியும் உறுப்பினருக்கு ஆதரவு வழங்குவதா அல்லது எமது கட்சியின் எம்.பி. ஒருவரை முன்மொழிவதா என்பது பற்றி எந்தவித தீர்மானமும் எடுக்கவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

சபாநாயகர் தெரிவின்போது வாக்களிப்பிலிருந்து சிலவேளைகளில் தாம் விலகி இருக்கக்கூடும் என்றும் அத்துருளிய ரதன தேரர் தெரிவித்துள்ளார். (க)

# பொலீஸ் சேவையில் இணைவோர் பட்டப்படிப்பு மேற்கொள்ள வசதி

கொழும்பு,ஏப்.17

பொலீஸ் சேவையில் இணைந்து கொள்பவர்கள் பட்டப்படிப்புக்களை மேற்கொள்வதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

அத்திடியாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள உயர் கல்விக்கான பொலீஸ் நிறுவனத்தில் பொலீஸ் சேவையில் சேர்பவர்கள் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளும் விதத்தில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

தற்பொழுது பொலஸ் சேவையில் இணைபவர்களுக்கு போதிய கல்வி அறிவோ தொழில்சார் அறிவோ இல்லை என்று நிலவிவரும் கருத்தை மாற்றி அமைப்பதற்காகவே இந்தப் புதிய திட்டம் செயற்படுத்தப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

பொலீஸ் சேவையாளர்களுக்கும் பட்டப்படிப்புப் பாடநெறிகளை ஆரம்பிக்கும் திட்டத்தை பொலீஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வா அங்கீகரித்து இருப்பதாக பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தலைவர் டேவ் குணரட்ண கூறினார். (ப)

## ஹெல உறுமய தேரர்களுக்கு

# நாடாளுமன்றில் விசேட ஏற்பாடுகள் எதுவுமில்லை

கொழும்பு,ஏப்.17

நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களான பௌத்த பிக்குமாருக்கு விசேட அரச ஒழுங்குகள் ஏதும் செய்யப்படமாட்டாது. பௌத்த பிக்குமார் அமர்வதற்கு வழமையாக ஆசனங்களில் வெள்ளை வேஷ்டி விரிக்கப்படுவதுண்டு. ஆனால், அந்த ஏற்பாட்டை நாடாளுமன்றத்திலும் செய்துகொடுக்க முடியாதென நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியானி விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இத்தகவலை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தை சந்தித்த பின்னர் ஜாதிக ஹெல உறுமய தலைவர் டாக்டர் எல்லாவெல மெதானந்த தேரர் வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் இவர்களுக்கு விசேட ஆசன வசதிகள் செய்துகொடுப்பதானது நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறும் செயலாகும் என செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களோடு சமமாக அமர்வது வழக்கமில்லாவிடினும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மதித்து நடக்கப்போவதாக மெதானந்த தேரர் கூறியுள்ளார்.

சபாநாயகர் பதவிக்குப் போட்டியிடுபவர்களில் யாரை ஆதரிப்பதென்பதில் இன்னமும் தாங்கள் முடிவு எதுவும் எடுக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

# ஹெல உறுமய தேரர்கள் நாடாளுமன்றுக்கு விஜயம்

கொழும்பு,ஏப்.17

ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களான 5 பிக்குகள் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தனர். நாடாளுமன்ற ஊழியர்கள் அவர்களுக்குத் 'தானம்' கொடுத்துக் கௌரவித்தனர்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகரவை அவர்கள் சந்தித்து உரையாடினார்கள். நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் நீல் இத்தாவெல மற்றும் படைக்கல அதிகாரி விஜயபில்லியா குரு ஆகியோர்களையும் ஹெல உறுமய உறுப்பினர்கள் சந்தித்து உரையாடியுள்ளனர்.

பின்னர் நாடாளுமன்றக் கட்டடப் பிரிவுகளை அதிகாரிகள் அவர்களுக்கு சுற்றிக் காண்பித்தனர். அதன் பின்னர் வண. டாக்டர் எல்லாவெல மெதானந்த, வண. டாக்டர் ஓமல்பே சோபித்த, வண. கொட்டாபொல அமரகீர்த்தி, வண. அதுரலியே ரத்தன, வண.உடுவே தம்மாலோக்க ஆகிய தேரர்கள் தம்மை நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதிவுசெய்து கொண்டனர்.

வண. உடுவே தம்மாலோக்க தேரர் தம்முடன் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்றிருந்த 'பிரித்' நூலைப் பெற்றுககொள்வதற்கு ஊழியர்கள் முண்டியடித்துக் கொண்டு முன்வந்தனர் எனக் கூறப்படுகின்றது. (ப)

## கோயிலாக்கண்டியில் சம்பவம்

# 250 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஆலயக் கோபுர மணி திருட்டு

## எடுத்துச்செல்லப்படுகையில் சிக்கியது

கோயிலாக்கண்டி மத்தி ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணிய ஆலயத்தின் 250 ஆண்டுகள் பழமைவாய்ந்த காண்டாமணி நேற்றுமுன்தினம் இரவு திருடப்பட்டுள்ளது. எனினும், திருடன் ஒருவனால் எடுத்துச்செல்லப்படுகையில் நேற்று அது மீட்கப்பட்டது.

சைக்கிளுடன் மணியைக் கைவிட்டுவிட்டுத் திருடன் தப்பியோடிவிட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆலய மணி திருடப்பட்டது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்வதற்காக கொக்குவிலிலிருந்து கோவில் உரிமையாளர் நேற்று அழைத்துவரப்பட்ட போது, நாவற்குளி மயானத்திற்கு அருகில் வீதியில் ஒருவர் மணியை சைக்கிளில் ஏற்றி வருவதை அவர்கள் கண்டுள்ளனர். உடனடியாக விசாரித்த போது திருடன் மணியையும் சைக்கிளையும் கைவிட்டு ஒடித்தப்பியுள்ளான் என்று கூறப்பட்டது.

தென் இந்தியாவின் திருச்செந்தூரில் இருந்து 1742ஆம் ஆண்டு இந்தக் காண்டாமணி கொண்டுவரப்பட்டு ஆலயக் கோபுரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 250 வருடங்களுக்கு மேலாக இது மணிக்கோபுரத்தில் இருந்துள்ளது. இந்தக் காண்டாமணி சுமார் 50 கிலோ நிறையுடையது எனத் தெரிவிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இப்பிரிவு மக்கள் 2002ஆம் ஆண்டு மீளக்குடியமர வந்தபோது இந்த ஆலயத்தில் அனைத்துப் பொருள்களும் திருட்டுப் போகாமல் இருந்துள்ளன. ஆலயம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு கடந்த வருடம் கும்பாஷேகம் நடத்தப்பட்டது. கடந்த மாதம் பத்துத்தினங்கள் அலங்கார உற்சவமும் நடைபெற்றுள்ளது.

மீட்கப்பட்ட மணி, திருடனின் சைக்கிள் ஆகியவை சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலீஸாரால் மணி மீளக்கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117-31)

# பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.17.

மானிப்பாய் றோட்டறிக் கழகத்தால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்றுமுதல் குறித்த நேர அட்டவணைப்படி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கணித, விஞ்ஞான பாடங்களுக்கான கருத்தரங்குகள அங்கு நடைபெறும். வர்த்தகம், கணக்கியல் பாடங்களுக்கான கருத்தரங்குகள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாளை நடைபெறும். இந்தக் கருத்தரங்குகள் நேற்று நடைபெறுவதாக இருந்தது. எனினும், தவிர்க்க முடியாத காரணத்தால் அது பிற்போடப்பட்டதாக மானிப்பாய் றோட்டறிக் கழக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.(ம)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

தெல்லிப்பழை,ஏப்.17

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவிருந்த வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார். (ம-150)

# மனித உரிமை பேணல் தொடர்பாகக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

மனித உரிமைகளைப் பாதுகாத்தலும் அவற்றை பேணுதலும் தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

எம்.சிறிபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் 20 அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.(எ-6)

# கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள் தொடர்பான விவரம் வருமாறு:-

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்கள்:-

★ மாலை 4 மணி இமையாணன் விளையாட்டுக் கழகம் எதிர் அச்சுவேலி சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

★ மாலை 5 மணி நீர்வேலி ஐக்கிய வி.க. எதிர் அச்சுவேலி தோப்பு வி.க.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்கள்:-

★ மாலை 4 மணி நீர்வேலி காமாட்சி வி.க. எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க.

★ மாலை 5 மணி - புத்தூர் கலைமதி வி.க. எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க.

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்க மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்கள்:-

★ மாலை 4 மணி - முடமாவடி ஞானவைரவர் வி.க. எதிர் நாயன்மார்கட்டு பாரதி 'ஏ' வி.க.

★ மாலை 4 மணி - மட்டுவில் வளர்மதி வி.க. எதிர் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி.க.

★ மாலை 5 மணி யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு அணி எதிர் அரியாலை ஐக்கிய வி.க.

★ மாலை 5 மணி - பன்னாலை கணேசன் வி.க. எதிர் நாயன்மார்கட்டு பாரதி 'பி' வி.க.

★ மாலை 4.30 மணி(பெண்கள் அணி) பல்கலைக்கழக உடற்பயிற்சி அலகு அணி எதிர் அரியாலை ஜெயபாரதி வி.க. (ம-6-5)

# நேர்முகப் பரீட்சை

வலிகாமம்தெற்கு,ஏப்.16

மருதனார்மடம், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள விவசாய சான்றிதழ் பயிற்சி நெறிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை ஒன்பது மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோரை பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள், கிராமசேவையாளர் நற்சான்றுப் பத்திரம் மற்றும் இரண்டு நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் சமுகமளிக்குமாறு நிறுவன அதிபர் கேட்டுள்ளார். (எ-152)

# நீலனைப் பணயம் வைத்து இந்தியாவுடன் பேரம் பேச கருணா திட்டமிட்டிருந்தாராம்!

## "தினமணிப்" பத்திரிகை தகவல்

சென்னை,எப்.17

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவு உதவிப்பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் நீலன், ராஜீவ் காந்தி படுகொலைச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இதுதொடர்பாக நேற்றைய 'தினமணி' பத்திரிகையில் வெளியாகிய செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை எதிர்த்து போர்க்கொடி உயர்த்திய அதிருப்தி தளபதி விநாயகமூர்த்தி முரளிதரன் என்கின்ற கருணா, கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்புப் பகுதியில் நீலனைச் சுட்டுக் கொன்றார்.

விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை இராணுவ வட்டாரங்களும் இத்தகவலைத் தெரிவித்தன.

பிரபாகரனை எதிர்த்து போர்கொடி உயர்த்தியதால் கருணாவை ஒடுக்க விடுதலைப் புலிகள் இயக்கம் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டது. கடுமையான தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் ஓடி கருணா தலைமறைவாகி விட்டார். தன்னை நம்பியிருந்த வீரர்களையும் 'கைவிட்டுவிட்டார்.

எனினும், தான் தப்பிச் செல்வதற்கு முன்பாக புலிகள் இயக்க உளவுப் பிரிவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான நீலன் என்கின்ற சின்னத்தம்பியை ஈவிரக்கமின்றி கருணா சுட்டுக்கொன்றார் என்று விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவு இணையத்தள வட்டாரங்கள் தெரிவித்தன.

உளவுப் பிரிவின் தலைமைப் பொறுப்பை திறம்பட வகித்து, உயிர் நீர்த்த நீலனின் சேவையை பாராட்டி அவரது மறைவுக்குப் பிறகு லெப்டினன்ட் கேணல் அந்தஸ்து வழங்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கருணா கோஷ்டியினரை ஒடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 5 வீரர்கள் உயிரிழந்தனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில், நீலனை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கருணா சிறைவைத்திருந்த விவரத்தை 'த சண்டே லீடர்' என்ற நாளிதழ் செய்தியாகவெளியிட்டுள்ளது. நீலனை பிணைக் கைதியாகப் பயன்படுத்தி இந்தியாவுடன் பேரம் பேசவும் கருணா 'திட்டமிட்டிருந்தது தெரியவந்துள்ளது.

பிரபாகரன் கடுமையான தாக்குதலை மேற்கொண்டதால் அதை எதிர்கொள்ள இயலாமல் தப்பிச் செல்வதற்கு முன்பாக நீலனை சுட்டுக்கொன்றுவிட்டார் கருணா என்றும் அந்த நாளிதழ் தகவல் தெரிவித்துள்ளது. (ஐ)



ஆப்கான் போரில் பாதிக்கப்பட்டு செயற்கைக் கால் பொருத்திக் கொண்ட ராணுவ அதிகாரி மைக்கேல் மெக்நாப்டனுடன் கடந்த புதன்கிழமை 'ஜாகிங்' செல்கிறார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்.

# ஐரோப்பிய நாடுகளுடன் போர்நிறுத்தத்துக்கு அல்-கெய்டா தலைவர் பின்லேடன் தயார்!!

## ஆனால், அதை ஏற்க அந்த நாடுகள் மறுப்பு

டுபாய்,ஏப்.17

முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஜரோப்பிய நாடுகள் நிறுத்திக்கொண்டால் அந்த நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதை தாங்களும் நிறுத்திக்கொள்வார்கள் என்று அல்-கெய்டா இயக்கத்தின் தலைவர் ஒஸாமா பில்லேடன் அறிவித்திருக்கின்றார்.

ஆனால், இந்தப் போர்நிறுத்த யோசனையை பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் எடுத்த எடுப்பிலேயே அடியோடு நிராகரித்துவிட்டன.

பல்வேறு ஐரோப்பிய நாடுகள் மீதும் அமெரிக்கா மீதும் அவ்வப்போது பெரும் தாக்குதல்களைத் தொடுத்து வரும் தலைமறைவு அல்கெயடா இயக்கத்தின் தலைவர் ஒஸாமா பின்லேடன்.

அவர் ஆற்றிய உரை அடங்கியதாகக் கூறப்படும் ஒலிப்பதிவு (ஓடியோ) நாடா ஒன்று பற்றி இப்போது பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது.

இந்த ஒலிப்பதிவு நாடாவை முதலில் டுபாயிலிருந்து ஒளிபரப்பாகும் அல்-அரேபிய தொலைக்காட்சியும் பின்னர் கட்டாரிலிருந்து ஒளிபரப்பாகும் அல்-ஜஸீரா தொலைக்காட்சியும் வெளியிட்டன.

அதில் பின்லேடன் கூறியிருப்பதாவது:-

முஸ்லிம்களை தாக்குவதைத் ஜரோப்பிய நாடுகள் நிறுத்திக் கொண்டால், அந்த நாடுகளுடன் போர்நிறுத்தம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறோம்.

இஸ்லாமிய நாடுகளில் இறக்கப்பட்டுள்ள ஐரோப்பிய சிப்பாய்கள் வெளியேறத் தொடங்கியதும் போர்நிறுத்தம் நடைமுறைக்கு வரும். கடைசி ஐரோப்பிய வீரர் எங்கள் மண்ணை விட்டு வெளியேறியதுமே ஐரோப்பாவுக்கு எதிரான போர் கைவிடப்படும்.

போர்நிறுத்தம் மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும். பிறகு அது நீடிக்கப்படும்.

கொல்லவேண்டும் என்பதற்காக நாங்கள் கொல்வதாக அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது பொய். 1980ஆம் ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானையும் செச்சினியாவையும் தாக்கிய பிறகே நாங்கள் ரஷ்யர்களைக் கொல்லத் தொடங்கினோம். ஈராக் மீதும் ஆப்கானிஸ்தான் மீதும் படையெடுத்ததாலேயே ஜரோப்பியர்களை கொன்றோம். பாலஸ்தீனத்தில் யூதர்களை அழிப்பதாலும் அரேபியா மீது படை எடுத்ததாலும் அமெரிக்கர்களைத் தாககினோம்.

எங்கள் இரத்தத்தை குடிப்பதை முதலில் நிறுத்துங்கள். நாங்களும் இரத்தம் குடிப்பதை நிறுத்துகிறோம்.

அமெரிக்காவுடன் ஒருபோதும் போர் நிறுத்தம் செய்துகொள்ள மாட்டோம்.

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்கா தான் காரணம்.

கடந்த மார்ச் 11 ஆம் திகதி ஸ்பெயின் நாட்டில் மட்றிட் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 191 பேர் பலியானதற்கு ஈராக், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளில் ஸ்பெயின் நடந்துகொண்ட விதம்தான் காரணம்.

செப்டெம்பர் 11, மார்ச் 11 ஆகிய இரு நாள்களிலும் என்ன நடந்தது? நீங்கள் தந்தவற்றை நாங்கள் உங்களிடமே திருப்பிக் கொடுத்திருக்கிறோம். இதன்மூலம் பாதுகாப்பு எல்லோருக்கும் தேவையான ஒன்று என்பதை உங்களை உணரச் செய்திருக்கின்றோம்.

ஹமாஸ் தலைவர் அகமது யாஸினைக் கொன்ற இஸ்ரேலைப் பழிக்குப் பழிவாங்குவோம்.



இவ்வாறு ஒலிப்பதிவு நாடாவில் பின்லேடன் கூறியிருந்தார்.

அந்த ஒலிப்பதிவு நாடாவில் பதிவாகியுள்ள குரல், ஒஸாமாபின்லேடனுடையதுதான் என்று அமெரிக்கப் புலனாய்வு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒஸாமா பின்லேடனின் இந்த யுத்தநிறுத்த யோசனையை பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன், போன்ற முக்கிய ஜரோப்பிய நாடுகள் எடுத்த எடுப்பிலேயே நிராகரித்துவிட்டன.

பயங்கரவாதக் கும்பலோடு எந்த உடன்பாட்டுக்குமோ, பேச்சுக்குமோ தாங்கள் தயாரில்லை என்று அந்த நாடுகளின் தலைவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்தி முரண்பாட்டை உருவாக்கும் நோக்குடனேயே இந்த அறிவிப்பை அல்-கெய்டா வெளியிட்டிருக்கின்றது என்று பிரிட்டன் கூறியுள்ளது. (ஐ)

### பங்களாதேஷில் கடும் சூறாவளி

டாக்கா,ஏப்.17

வங்கதேசத்தின் வடக்குப் பகுதியில் புதன்கிழமை இரவு வீசிய சூறாவளி காற்றினால் 41 பேர் இறந்தனர். பல கிராமங்கள் சேதமடைந்தன.

மேகாலய எல்லையை ஒட்டியுள்ள வங்கதேச நகரங்களான மைமன் சிங், நெட்ரே கோனா ஆகியவற்றில் 24 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் சூறாவளிக் காற்றினால் நாசமடைந்தன.

பல்வேறு கிராமங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. பல வீடுகள் இடிந்து விழுந்தன. பயிர்கள் பெருமளவு சேதமடைந்தன.

நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்து திறந்த வெளியில் இரவைக்கழித்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

### ஈரான் தூதரக அதிகாரி பக்தாத்தில் கொலை!

பக்தாத்,ஏப்.17

ஈராக் தலைநகர் பக்தாத்தில் வைத்து ஈரான் தூதரக அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் பெயர் கலீல் நைமி. தூதரகத்துக்குக் காரில் சென்றபோது அடையாளம் தெரியாதவர்களால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இரு குண்டுகள் காரின் கண்ணாடியைத் துளைத்துக்கொண்டு அவர் மீது பாய்ந்தன. கார்ச் சாரதியின் கதவுப்பக்கத்தில் 8 இடங்களில் குண்டுகள் துளைத்திருந்தன. (ஐ)

### தலிபான்களின் தாக்குதலில் 10 பேர் பலி


காபூல்,ஏப்.17

ஆப்கானில் தலிபான்கள் நடத்திய திடீர்த் தாக்குதலில் மாவட்ட பொலீஸ அதிகாரி மற்றும் அவரது பாதுகாவலர்கள் ஒன்பது பேர் இறந்தனர்.

இச்சம்பவம் அந்த நாட்டின் தென கிழக்கே உள்ள கந்தஹார் மாகாணம், சினா்டோ மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

தலிபான் தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகமுள்ள மிஸான் மாவட்டத்தைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரி முகம்மது மற்றும் அவரது பாதுகாவலர்கள் சினா்டோ மாவட்டத்தில் பயணித்துக்கொண்டிருந்தபோது, அவர்கள் சென்ற வாகனத்தின் மீது தலிபான்கள் திடீர்த் தாக்குதல் நடத்தினர்.

தலிபான்கள்மீது பொலீஸார் திருப்பிச் சுட்டதில் ஒரு தீவிரவாதி இறந்தார். (ஐ)



நேபாளத்தில் மன்னர் ஆட்சியை எதிர்த்ததற்காக சிறையில் அடைக்கப்பட்ட அரசியல்வாதிகளை விடுவிக்கக்கோரி காத்மண்டு நகரில் கிளர்ச்சி செய்த மனித உரிமைகள் அமைப்பின் தொண்டரை கடந்த புதன்கிழமை கைது செய்து அழைத்துச் செல்லும் பொலீஸார்.

# மன்னர் ஆட்சியை எதிர்த்து நேபாளத்தில் போராட்டம்

காத்மண்டு,ஏப்.17

நேபாள நாட்டில் மன்னர் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி தீவிரமடைந்திருக்கின்றது.

ஆயுத இயக்கங்கள் வன்முறை வழியிலும், ஜனநாயக அமைப்புகள் சாத்வீக முறையிலும் போராடி வருகின்றன.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகள மன்னர் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடி வருகிறார்கள். இதற்கு பொதுமக்களில் ஒரு தரப்பினரும் ஆதரவு கொடுத்து வருகிறார்கள்.

இதேபோல், மன்னர் ஆட்சிக்கு எதிராக அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோரும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களை நேபாள அரசு அடக்குமுறை மூலம் தடுதது வருகிறது.

இதுதவிர, மன்னர் ஆட்சிக்கு எதிராகப் போராட அங்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதை எதிர்த்து முன்னாள் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தலைமையில் நூற்றுக்கணக்கானோர் காதமண்டு நகரில் போராட்டம் நடத்தினார்கள். தடையை மீறி நடந்த இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவரையும் பொலீஸார் கைது செய்தனர். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் பொலீஸாரும் மோதிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசத்தில்

# பங்குச் சந்தைக் கட்டடம் முற்றாக எரிந்து நாசம்

## சுமார் நூறுகோடி ரூபா இழப்பு

உத்தரப் பிரதேச பங்குச் சந்தைக் கட்டடத்தில் பயங்கரத் தீவிபத்து ஏற்பட்டது. இதில் நூறுகோடி ரூபா (இந்தியப் பணத்தில்) மதிப்புள்ள பொருள்கள் எரிந்து சேதம் அடைந்தன.

கான்பூர் நகரில் உள்ள பல மாடிக கட்டடத்தில் உத்தரப் பிரதேச பங்குச் சந்தை இயங்கி வந்தது. இந்தக் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் மாலையில் திடீரென்று தீப்பிடித்தது.

கட்டடத்தின் தரைத் தளத்தில் உள்ள சில அறைகள் மூடிக்கிடந்தன. அங்கிருந்தே முதலில் தீப்பிடித்தது. சிறிது நேரத்திற்குள்ளாக அது கட்டடம் முழுவதும் பரவிப் பிடித்துக் கொண்டது. தீ வானத்தை முட்டும் அளவுக்கு கொழுந்துவிட்டு எரிந்தது. அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமானது.

தகவல் அறிந்ததும் 12 தீயணைப்பு வண்டிகளில் வீரர்கள் விரைந்துசென்று நெருப்பை பல மணிநேரம் போராடி அணைத்தார்கள். பக்கத்து கட்டடங்களுக்குத் தீ பரவாமல் தடுத்தனர்.

என்ற போதிலும், கட்டடம் முழுவதுமே தீக்கிரையாகிவிட்டது. கட்டடம் மொத்தம் 398 அறைகள் கொண்டது.

இந்தத் தீ விபத்தில் கட்டடத்தில இருந்த பங்குச் சான்றுகள், முக்கிய தஸ்தாவேஜுகள், கணனிகள், மின்னணுச் சாதனங்கள், மேஜை, நாற்காலிகள் போன்றவை அடியோடு எரிந்து போயின. சேதம் 100 கோடி ரூபாவாக இருக்கும் என்று மதிக்கப்படுவதாக பங்குச் சந்தை தரகர் சங்கப் பிரமுகர் கார்க் என்பவர் தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டபோது பங்குப் பரிவர்த்தனைகள் முடிந்துவிட்டன. எனவே, வாடிக்கையாளர்கள் யாரும் கட்டடத்துக்குள் இருக்கவில்லை. 50 ஊழியர்கள் மட்டுமே பணியில் இருந்தார்கள். தீப்பிடித்ததும் அவர்களும் அலறியடித்து ஓடித் தப்பி விட்டார்கள்.

இதனால், உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ஐ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.நா.கோணேஸ்வரன் (B.Sc., J.P.)

(அகில இலங்கை சமாதான நீதிவான்)



கீரிமலையை பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் இலங்கை நிர்வாக சேவையாளரும், அளவெட்டியின் பிரபல கல்வி நிறுவனமான கோணேஸ் மற்ஸ் அக்கடமியின் இயக்குநரும், கணித ஆசிரியருமான இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி R.T.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவரை நாங்கள் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(30926)(38-17-19) - நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலணை 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் எமது கிராமத்திற்கு கிராம அலுவலராக கடமையாற்றியபொழுது 1989களில் சுயதொழில் முயற்சி நன்கொடைப் பணம் 4000/-ஐ எமது கிராம மக்களுக்கு பெற்றுத்தந்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரும், இவர் சேவையாற்றிய காலப் பகுதியில் எமது கிராமத்திற்கு கிராம முன்னேற்றச் சங்கம் ஸ்தாபிப்பதற்கு காரணமாக இருந்தவரும் சிறந்த சமூக சேவையாளருமான

### திரு.காராளசிங்கம் கணேசலிங்கம்

அவர்கள் அண்மையில் வேலணை பிரதேச செயலகத்தில் முதலாம் தர கிராம அலுவலராகப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு நாம் அவரை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரது சேவையானது நல்ல முறையில் சிறப்புற்றுத் திகழவும் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழவும் எல்லாம் வல்ல செட்டிபுலம் ஐயனார் துணைபுரிய வேண்டுகின்றோம்.

வேலணை செட்டிபுலம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.
வேலணை செட்டிபுலம் ஐயனார் கோவில் பரிபாலன சபை.
(30923) வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையம். (21-19-17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.கனகநாயகம் சிவன் சேய் J.P.

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத் தலைவரும் முன்னாள் உடுவில் இந்து இளைஞர்மன்ற, பாலர் பாடசாலைத் தலைவரும், தற்போது யா/இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியருமாகிய இவர் 15.04.2004 அன்று யாழ். மாவட்ட நீதிபதி R.T.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டார். இவரை நாங்கள் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(30926)(34-21-12-19) ~ நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.முருகேசு அருமைநாயகம் J.P.

(அகில இலங்கை சமாதான நீதிவானும்,
J/212 மல்லாகம்தெற்கு கிராமசேவையாளரும்)


காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிராம அலுவலரும், காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டுச் செயலாளரும், காங்கேசன்துறை அபிவிருத்திக்கழகத்தின் கைப்பந்தாட்ட தலைவராகவும், யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தராகவும், மல்லாகம் R.D.S. சனசமுகநிலையத்தின் போசகராகவும், சேவைத்திறனுக்கு மேலதிகாரிகளால் பாராட்டுக்களையும் பெற்றவரான இவர் 15. 04. 2004 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி R.T. விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவரை நாங்கள் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(30926)(21-12-19) ~ நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.அப்பலிங்கம் உமாவரகீசர் (J.P.)

(அகில இலங்கை சமாதான நீதிவான், J/201 ஏழாலை மேற்கு, ஏழாலை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)



ஏழாலை மேற்கு, ஏழாலையில் வசிப்பவரும், வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும், பிரபல தனியார் கல்வி நிலைய ஆங்கில ஆசிரியரும், ஏழாலை மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் முன்னாள் செயலாளரும், ஏழாலை பெரியதம்பிரான் கோயில் பரிபாலன சபையின் முன்னாள் செயலாளருமாக இருந்த இவர், 15.04.2004 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி R.T.விக்கினராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். இவரை நாங்கள் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(30926)(38-21-12-19) - நண்பர்கள்.

## சனசமூக நிலைய சித்திரைக் கலைவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.17

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த சித்திரை மாத விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.

காந்தி சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. (ஐ-12)

## சத்துணவு வழங்கல்

தென்மராட்சி,ஏப்.17

'கியூமெடிக்கா' நிறுவனத்தினால் மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் முன்பள்ளிச் சிறார்களுக்கு வாரத்தில் மூன்று தினங்கள் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. (10-117)

## ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

தென்மராட்சி,ஏப்.17

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் சேவை முன் பயிற்சியில் கலந்துகொண்ட தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வலய கல்வி அபிவிருத்திப்பிரிவில் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சியில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் இக்கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-8-117)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு கடந்த 15ஆம் திகதி தொடக்கம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்று வருகிறது.

செயற்றிறன் வாய்ந்த அடிப்படையில் ஆசிரியர்கள் கற்றல் செயறபாடுகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக இப்பயிற்சிச் செயலமர்வு இடம்பெற்று வருகின்றது. (10-12)

## வீதி புனரமைப்பு

குருநகர்,ஏப்.17

யாழ்.கன்னியர்மடம் வீதி யாழ். மாநகர சபையால் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

யாழ்.திருவள்ளுவர் சனசமூக நிலையம், இராசாவின் தோட்டம் அருளமாதா சனசமூக நிலையம் ஆகியன இவ்வீதியைச் செப்பனிடுமாறு யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (10-51)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



HAPPY BIRTHDAY

செல்வி

### பிரதிக்கா சிவம்

சிவம்-தயாசோதி தம்பதிகளின்
செல்வப் புதல்வி
செல்வி பிரதிக்கா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (17.04.2004) சனிக்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, இந்தியாவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, யாழ்ப்பாணத்திலுள்ள தாத்தா, அம்மம்மா, இந்தியாவிலிருக்கும் மாமா, மாமி குடும்பத்தினர், பிரான்ஸிலுள்ள பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தினர், கொழும்பிலுள்ள மாமி, சுவிஸ் மாமா குடும்பத்தினர், லண்டனிலுள்ள மாமா, மாமி குடும்பத்தினர் மற்றும் பிரான்ஸிலுள்ள பெரியமாமா, மாமி குடும்பத்தினர், கனடாவிலுள்ள சின்னமாமா, மாமி குடும்பத்தினர், யாழ்ப்பாணத்திலுள்ள பெரியப்பா, பெரியம்மாமார், அண்ணன்மார், அக்கா, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் பல்கலையும் கற்று செட்டியாமடம் வீரகத்திப் பிள்ளையார் அருளால் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

- தாத்தா, அம்மம்மா
(சி-34478) (26-21-12-19) திரு.திருமதி மகேந்திரன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.சுப்பிரமணியம் சிவபாதம் J.P

(அகில இலங்கை சமாதான நீதிவான்)



கோப்பாய் வடக்கு, கோப்பாயில் வசிக்கும் ஓய்வுபெற்ற தபாலதிபரும், வடகோவை மகிழடி வைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் செயலாளரும், வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில் பரிபாலன சபையின் அங்கத்தவரும், கிராம முன்னேற்றச் சங்க அங்கத்தவரும், முன்னாள் தபால் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கத்தின் செயலாளராகவும் விளங்கும் இவர் 15.04.2004 அன்று யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி R.T. விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொணடார் இவரை நாங்கள் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

-நண்பர்கள்.
30926 (40)

## தேவை

யாழ்.நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை.

விண்ணப்பதாரர் க.பொ.த.சாதாரணதரம் (ஆங்கிலம் உட்பட) சித்தியுடன் அனுபவமும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. இருபாலாரும் சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.2229,
மே/பா உதயன்.
(30913)




## திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் சித்திரை மாதம் 05ஆம் நாள் (17.04.2004) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிமுதல் 3.30 மணி வரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட



### தர்சா தமிழ்ப் பதிப்பகம்

என்னும் அச்சுக்கூடத்தினைத் திறக்கவுள்ளோம். அவ்வமையம் அச்சுவேலி, இலங்கை வங்கி முகாமையாளர் திரு.நடராசா இந்திரகுமார் அவர்கள் திறந்துவைப்பார்கள்.

தாங்கள் வருகைதந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

இராச வீதி, அச்சுவேலி.
(மத்திய கல்லூரி முன்பாக)
T.P. No.: 0777 243370

தலைமையகம்:
சேகர் தமிழ்ப் பதிப்பகம்,
சுவிற்ஸர்லாந்து.

தர்சா தமிழ்ப் பதிப்பக உரிமையாளர்.

(30930) (24-21-12-19)

உதயன்

## தேசிய அரசு அமையுமா?

தேர்தலோடு பிடித்த அரசியல் சூடு இன்னும் தணியவில்லை.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டிய போதிலும் அதற்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சூழலில் நிச்சயமற்ற அரசியல் எதிர்காலமும் இழுபறியும் தொடர்ந்து நீடித்தே வருகின்றன.

இதுவரை ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சியைக் கவிழ்க்கவும், புதிய பொதுத் தேர்தலை எதிர்கொள்ளவும், தேர்தலில் வெற்றிபெறவும் வசதியாக ஜே.வி.பியைத் தனது கூட்டுக்குள் இழுத்துக்கொண்டு, அது இழுத்த பக்கமெல்லாம் இழுபட்ட ஜனாதிபதி, இப்போது தமது அணி வெற்றிபெற்றதும், அந்த வெற்றிக்குப் பங்குதாரர்களாக இருந்த ஜே.வி.பியை வெட்டிவிட - ஒதுக்கிவிட - முயல்கின்றார்.

- இதுவே ஜே.வி.பி. தரப்பினரது மன ஆதங்கம்; குற்றச்சாட்டு; விசனமும் கூட.

அரசு செயல்படுவதற்குத் தங்களின் ஆதரவு கட்டாயம் என்பதைப் பணயமாக வைத்துக்கொண்டு அள்ளவேண்டியதை ஆரம்பத்திலேயே அள்ளிவிடத் துடியாய்த் துடிக்கிறது ஜே.வி.பி என்பது ஸ்ரீல.சு. கட்சித் தலைவர்களின் மனக்குமுறல்.

ஏற்கனவே, பல்வேறு மாவட்டங்களில் தங்கள் கூட்டமைப்புப் பட்டியலில் போட்டியிட்டு, தங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ஜே.வி.பி. அள்ளிச் சுருட்டிக்கொண்டு போய்விட்டது என்ற எரிச்சலில் இருக்கும் ஸ்ரீ.ல.சு.க. பிரமுகர்களுக்கு, ஜே.வி.பியின் இந்தப் பிடிவாதப் போக்கு மிகுந்த அதிருப்தியைத் தந்திருக்கின்றது.

அரசின் ஸ்திர நிலையை உறுதிப்படுத்தும் ஒரே காரணத்துக்காக, அடிக்கடி தொல்லை தந்து நிபந்தனைகளைப் போடும் ஜே.வி.பிக்குப் பின்னால் போவதை விடுத்து, ஐ.தே.முன்னணியுடன் சேர்ந்து தேசிய அரசு ஒன்றை அமைக்க முனைந்தால் என்ன என்று அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றார்கள்.

ஐ.தே.கட்சி தரப்பிலும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தீவிரம் கொண்ட செயல்திறனின்மையால் அதிருப்தி கொண்டுள்ள மூத்த பிரமுகர்கள் சிலர் இந்தத் தேசிய அரசு முயற்சியைப் பெரிதும் வரவேற்கிறார்கள் என்று தெரிகிறது.

மூன்றாவது சக்தியான ஜே.வி.பியோ, ஹெல உறுமயவோ மேலும் வலுவுடையவையாக உருவெடுப்பதைத் தடுப்பதற்கு ஏதேனும் விரைந்து செய்ய வேண்டும் என்ற எண்ணமும் ஐ.தே.கட்சி வட்டாரங்களில் அதிகம் நிலவுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பெரிய கட்சிகள் தமக்குள் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைப்பதே இத்தகைய பல்வேறு சிக்கல்களுக்கு உடனடித் தீர்வாக இருக்கும் என்று இந்த இரண்டு கட்சிகளின் மூத்த தலைவர்கள் மட்டத்தில் கருத்து நிலவுவதாகத் தெரிகின்றது.

ஈழத் தமிழர்களின் சார்பில் - தங்களின் - உரிமைகளுக்காக - அவர்களால் கொடுக்கப்படும் அழுத்தம், நெருக்கடி போன்றவற்றை சமாளிப்பதற்கும் முகம் கொடுப்பதற்கும் கூட, இத்தகைய தேசிய அரசு நடவடிக்கை பெரிதும் உதவும் என்றும் இக்கட்சிகளின் தலைவர்கள் கருதுகின்றார்கள்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி கூடவிருக்கின்றது. அதற்கு முன்னர் இந்த யோசனைகளுக்கு - திட்டங்களுக்கு - ஒரு முடிவு காணப்பட வேண்டும் என்பதால் அடுத்துவரும் நாள்களில் தீவிர அரசியல் பேச்சுக்கள் தலைவர்களிடையே நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய முயற்சி - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து, நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக்கூடிய பிரதமரின் கீழான ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்கு வழிசெய்யும் அரசமைப்பு மாற்றத்துக்கும் உதவும் என்பதும் ஒரு தரப்பினரின் கருத்து.

அரசமைப்பு மாற்றத்தை இலகுவாகச் செய்வதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையை தரும் என்பதாலும் -

ஜே.வி.பியினரின் மிரட்டிப் பணியவைக்கும் முயற்சிகளை முறியடிக்க வழிசெய்யும் என்பதாலும் -

தேசிய அரசுத் திட்டத்தை ஜனாதிபதியும் வரவேற்கிறார் என்றும் கூறப்படுகிறது.

தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையே பிரதமராக வைத்துக்கொண்டு - அரைக்கு அரைவாசி அமைச்சுப் பதவிகளை மாத்திரம் ஐ.தே.கட்சி பெற்றுக்கொண்டு - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசை அமைக்கலாம் என ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அவர்களின் எதிர்பார்ப்பு சாத்தியமாகுமா என்பது அடுத்து வரும் தினங்களில் தெரிந்துவிடும்.

# பெரும் எண்ணிக்கையில் சிறார்களை விடுவித்ததன் மூலம் புலிகள் தமது சமாதான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்

## 'யுனிசெவ்' பிரதிநிதி ரெட் சைபான் பாராட்டு

கொழும்பு,ஏப்.17

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களை விடுவித்திருப்பது சமாதான நடவடிக்கையில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையைத் தெளிவுபடுத்துவதுடன் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் செயற்றிட்டத்தைத் துரிதப்படுத்தவும் உதவியாக அமைந்துள்ளதாக இலங்கைக்கான 'யுனிசெவ்' பிரதிநிதி ரெட் சைபான் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு - வாகரையில் கடந்த செவ்வாயன்று தமிழீழ விடுதலைப் புலிகள் 150 இற்கும் மேற்பட்ட போராளிச் சிறுவர்களை விடுவித்துள்ளனர். போராளிகளாக இணைக்கப்பட்ட மேற்படி சிறுவர்களை விடுவித்து அவர்கள் குடும்பத்துடன் இணைந்து வாழச் செய்யும் நடவடிக்கையில் 'யுனிசெவ்' அமைப்பு தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றது.

'யுனிசெவ்' நிறுவனம், புலிகள் பெரும் எண்ணிக்கையான போராளிகளை விடுதலை செய்ததை வரவேற்கும் அதே வேளை, விடுவிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஒத்தாசைகளை வழங்கும்.

இந்தச் சிறுவர்கள் ஆயுதக் குழுக்களில் இணைக்கப்பட்டதன் காரணமாக இவர்களின் அடிப்படை உரிமைகளான கல்வி கற்கும் உரிமை, பெற்றோர்களின் ஆதரவுடன் வாழும் உரிமை, விளையாடும் உரிமை என்பன மறுக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான சிறுவர்கள் ஆயுதங்களைக் கையளித்துவிட்டு நேரடியாகக் குடும்பத்துடன் இணைந்துள்ளனர். இவர்களின் பெற்றோர் 'யுனிசெவ்' அலுவலகத்தில் பதிவுசெய்து உரிய உதவிகளைப் பெறலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களை விடுவித்திருப்பது வரவேற்கத்தக்கது. புலிகள் கிழக்கில் உள்ள சிறுவர்களை விடுவித்தது போன்று வடக்கிலும் இந்த நடவடிக்கையை விஸ்தரிக்கவேண்டும்.

விடுவிக்கப்பட்ட சிறுவர்களில் மருத்துவ உதவி தேவைப்படும் சிறுவர்களுக்கு 'யுனிசெவ்' உதவி வழங்கும்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குரிய நலன்களைக் கவனிப்பதற்காக ஐ.எல்.ஓ., சமூக நலன்புரி அமைச்சு, ஸ்ரீலங்கா சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யு.என்.டி.பி., யு.என்.எச்.சி.ஆர். போன்ற தொண்டர் நிறுவனங்களுடன் 'யுனிசெவ்' இணைந்து செயற்படும் - என்றுள்ளது. (ஐ-8)

# அவசர விபத்துச் சிகிச்சைப் பிரிவு நிறுவ யாழ். ஆஸ்பத்திரிக்கு நிதி

யாழ்ப்பாணம்,ஏப்.17

அவசர விபத்துச் சிகிச்சைப் பிரிவு, இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவு என்பன யாழ். மாவட்ட அரச அதிபரின் நிதியுதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. விபத்துக்களில் சிக்கி காயமடைவோருக்கான அவசர சிகிச்சைப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லை. இதனால் தேவையற்ற உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுக்கும் வகையிலேயே அவசர விபத்துச் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவை உருவாக்குவதற்கு 9 கோடி ரூபாவையும் இருதய நோய்த் தடுப்புப் பிரிவை அமைப்பதற்கு 6 கோடி 50 லட்சம் ரூபாவையும் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதி உதவி மூலம் சகல வசதிகளும் கொண்ட வகையில் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான ஆரம்பக் கட்டட வேலைத்திட்டங்களை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

நோயாளர்களுக்கு அவசர சிகிச்சையை மேற்கொள்வதற்கு ஏதுவாக யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது வெளிநோயாளர் பகுதிக் கட்டடம் அமைந்துள்ள இடத்துக்குப் பின்புறமாக உள்ள பகுதியில் வீதியின் பக்கமாக இப்பிரிவு அமைக்கப்படவுள்ளது.

இந்த வீதிப் பகுதியில் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு படையினர் நிலைகொண்டுள்ளபோதும் அந்தத் தடையை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-5)

## செல்வநகர் பகுதியில் புதையுண்டுள்ள மிதிவெடிகளை அகற்றக் கோரிக்கை

கைதடி,ஏப்.17

நாவற்குழி செல்வநகரை அண்டிய பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் உட்பட வெடிபொருள்களால் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது இப்பிரதேசத்தில் வகை தொகையின்றி மிதிவெடிகள், புதைக்கப்பட்டன. அத்துடன், வெடிக்காத நிலையில் பல எறிகணைகளும் இங்கு காணப்படுகின்றன.

இதேவேளை, இந்தப் பகுதிக்கு மேய்ச்சலுக்காகச் செல்லும் கால் நடைகள் பலவும் கடந்த காலங்களில் மிதிவெடிகளில் சிக்கி உயிரிழந்தமை தெரிந்ததே.

மேற்படி பகுதியைச் சேர்ந்த மக்கள் மிதிவெடி அச்சம் காரணமாக இற்றைவரை அங்கு மீளக் குடியமராமல் உறவினர்களின் வீடுகளில் பல சிரமங்களுக்கும் மத்தியில் வசித்து வருகின்றனர் என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் மேற்படி பகுதியில் புதைந்துள்ள மிதிவெடிகளை அகற்றி, மக்களை மீளக்குடியமர்த்த விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-75)

## யாழ். சுண்டிக்குழிப் பகுதியில் திருடர் நடமாட்டம் அதிகரிப்பு

அரியாலை,ஏப்.17

யாழ். சுண்டிக்குழிப் பகுதியில் இரவு வேளைகளில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீதியில் ஒளிர்ந்துகொண்டிருக்கும் மின் விளக்குகளைக் கல்லால் எறிந்து உடைத்துவிட்டு வீடுகளுக்குள் நுழைந்து பொருள்களைத் திருடர்கள் திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுண்டிக்குழி பஸ்தியன் சந்திப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த திருடர்கள் வீட்டுக்காரர் விழிப்படைந்ததும் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளைக் கல்லால் எறிந்து உடைத்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தப் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்திருப்பதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். (ஜ-8-17)

### நாளை

சித்திரை 06
ஞாயிற்றுக்கிழமை
(18.04.2004)
திதி : சதுர்த்தசி
மாலை 6.36 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
காலை 6.42 வரை.
சுபநேரம்: 9.03 - 10.33
ராகுகாலம்: 4.33 - 6.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அன்பும் இன்பமுமே வாழ்க்கையின் அடிப்படை.

## சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 97ஆவது ஆண்டு நினைவு விழா நிகழ்வுகள்

### 'உதயன்' அனுசரணையில் பரிசில்கள்

வடமராட்சி,ஏப்.17

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 97ஆவது ஆண்டு நினைவுவிழா இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மு.திருமலிங்கம் தலைமையில், சதாவதானி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி சி.சிவலிங்கராசாவும், சிறப்பு விருந்தினர்களாகப் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி சி.புஸ்பலிங்கம், மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் முகாமையாளர் திருமதி சரஸ்வதி சிவனருள் சுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சதாவதானியின் "வாழ்வும் பணியும்" என்னும் தலைப்பில் நெல்லியடி ம.ம.வித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இதனைத் தொடர்ந்து அகில இலங்கை இளங்கோ கழகம் வழங்கும் வழக்காடு மண்டபம் மற்றும் தவநாதன் றொபெட் குழுவினர் வழங்கும் இன்னிசைக் கச்சேரி என்பனவும் இடம்பெறும். சதாவதானியின் நினைவு தினத்தை முன்னிட்டு 'உதயன்' அனுசரணையுடன் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (எ-10-173-ரி)

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.17

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவுடன் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட கதிரைவேற்பிள்ளை ஞாபகார்த்த கட்டுரைப்போட்டியில் கலந்துகொண்டோரில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டவர்களின் பெயர், விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாமிடம்:- அகிலா ஆதித்தன் (தம்பசிட்டி, புலோலி மத்தி), இரண்டாமிடம்:- சுஜிதா இராஜமோகன் (முதலாம் கட்டை ஒழுங்கை, பருத்தித்துறை), மூன்றாமிடம்: சசிரேகா மதனகோபாலசாமி (கார்த்திகேசர் வீதி, புலோலி மேற்கு).

முதலாமிடம் பெற்றவருக்கு ஆயிரம், ரூபாவும் இரண்டாமிடத்தைப் பெற்றவருக்கு 750 ரூபாவும், மூன்றாமிடத்தைப் பெற்றவருக்கு 500 ரூபாவும் பரிசாக வழங்கப்படவுள்ளது. (எ-10)

### யாழ். ஆஸ்பத்திரியில்

## நோயாளர் எண்ணிக்கை சடுதியாக உயர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர்கள் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

நாள்தோறும் 350 தொடக்கம் 400 வரையான நோயாளர்கள் நீண்ட வரிசையில் நின்று சிகிச்சைபெற்றுச் செல்வதைக் காணமுடிகின்றது.

கோடைகால வெய்யில் வெப்பம் என்பனவற்றால் பரவும் தொற்றுநோய்கள் காரணமாகப் பலர் சிகிச்சைபெறவருகின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சாதாரண காய்ச்சல், மலேரியா, சளிக்காய்ச்சல் எனப் பல நோய்களுக்கு நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். அத்துடன், வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்தகைய மருந்துகளை வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியர்கள் எழுதிக்கொடுத்து விடுகின்றனர். (ஐ-12)

**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai, Jaffna,**
**Sri Lanka.**

Students are welcome to register for the following Courses immediately.

Commencement:- 21st April 2004

**1. Computer Certificate Course in Macromedia Flash**
Duration:- 3 months
Fees:- Rs.1,000/=

**2. Computer Certificate Courses - Evening Batch**
(Time:- 3p.m.)

▲ MS Word
▲ MS Excel
▲ MS Access
&
▲ Power point

Duration:- 4 months
Fees:- Rs.2,500/=

(C34330) (34)

★ Facilities:- Library, Hostel & Sports
FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-
Director,
**Jaffna College Institute of Technology**
Vaddukoddai.
T.Phone: 0602213139 E.mail: jcit@sltnet.lk.



# பராமரிப்பாளர் தேவை

எனது சுகவீனமுற்ற தாய்க்குப் பராமரிப்பு சேவை செய்வதற்கு 50-60 வயதிற்கு இடைப்பட்ட பெண்மணி ஒருவர் தேவை.

தங்குமிட வசதி, சாப்பாட்டு வசதி செய்து கொடுக்கப்படும். சம்பள விடயம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நேரடியாக உடன் தொடர்புகொள்ளவும்.

**வி.விஸ்ணுதாஸ்,**
குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.



அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் [வ-து]

# பதவி வெற்றிடம்

## பொது முகாமையாளர் இல. 101/08

எமது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள பொதுமுகாமையாளர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் *தலைவர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி* என்னும் முகவரிக்கு 30.04.2004 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்துடன் நற்சான்றிதழ்களின் பிரதிகள், கல்வித் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகள், அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 6500 - 9000
120X10 - 130X10

**வயதெல்லை :**
முடிவுதிகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தகைமைகள் :**
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை தரத்தில் 3 வருடத்திற்கு குறையாத காலப்பகுதியில் கடமையாற்றிய அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை தரத்தில் 6 வருடத்திற்குக் குறையாத காலப்பகுதியில் கடமையாற்றிய அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அல்லது அதற்கு ஒத்த தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனங்களில் முகாமை மட்ட பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) தகுதிச்சான்றிதழ்/ க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனங்களில் முகாமைமட்ட பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்களும், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**ரு.கந்தசாமி,**
தலைவர்,
அளவெட்டி மல்லாகம்,
ப.நோ.கூ.சங்கம்.


## பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மேற்பார்வையாளர், உதவி இணைப்பாளர், இணைப்பாளர், நிரந்தர நோக்குநர்களாக யாழ். வலயத்தில் கடமையாற்றவுள்ளவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். வலயத்துக்குட்பட்ட உத்தியோகத்தர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## விவசாயக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். மாவட்ட விவசாயக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (10-139)

## தாவளை இயற்றாலை மாதிரிக்கிராமமாகத் தெரிவு

வரணி,ஏப்.17

'நிகொட்' அமைப்பின் நிதி உதவியுடன் தாவளை, இயற்றாலை கிராமம் இவ்வாண்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இது சார்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை மருதடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. 'நிகொட்' நிறுவனப் பிரதிநிதி மற்றும அகதிகள் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி சமூக முன்னேற்றத்திட்டங்களை அமுல்படுத்தி, வீதி அபிவிருத்தி, மின்சாரம், சுகாதாரம், பொதுமண்டபம் ஆகிய வசதிகளைச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ-170)

## வாடிக்கையாளருக்குக் குடைகள்

தென்மராட்சி,ஏப்.17

மக்கள் வங்கியின் புத்தாண்டு வெகுமதியாக அறிவிக்கப்பட்ட அன்பளிப்புக் குடைகளைச் சாவகச்சேரி மக்கள் வங்கியில் 220 பேர் பெற்றுக்கொண்டனர் என்று மக்கள் வங்கி முகாமையாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

15 ஆயிரம் ரூபா வைப்பில் இட்டவர்களுக்கே குடைகள் வழங்கப்பட்டன. (ஐ-117)

## இணுவிலில் பண்ணிசை போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.17

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு திருநெறிய தமிழ்மறைக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் பண்ணிசைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் இந்து சமய கலாசார முறைப்படி கலந்துகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-5)

## விளையாட்டுக்கழக ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.17

இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் இராஜசிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனும் கலந்துகொள்வார்கள்.(ஐ-ரி)

## சீனத் திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'சூசௌநதி' எனும் சீன மொழித் திரைப்படம் யாழ். பல்கலைக் கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் ஆங்கில துணைத் தலைப்புகளுடன் காண்பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா, க.சட்டநாதன், விமர்சகர் ஏ.ஜே.கனகரத்தினம் ஆகியோரின் நெறிப்படுத்தலில் கலந்துரையாடல் இடம்பெறும் (ஐ-ரி)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**லூயிஸ் மாகிறேற்**

மலர்வு 14-03-1920 உதிர்வு 17-04-2003

ஆண்டு ஒன்றென்ன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகின்றோம்.

(30801) (24-12-18)

*32/5, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.*
மகன் - இலங்கைராசா குடும்பம் (ஹொலண்ட்), ஞானமகன் ஆரோக்கிய நாதர் குடும்பம் (யாழ்ப்பாணம்).



# தகவல் தொழில்நுட்பப் பூங்கா

தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடம் (கச்சேரி முன்பாக)
கண்டி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021-2223641, 021-2223643

புனர்வாழ்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காவானது கடந்த 3வருடமாக தகவல் தொழில்நுட்ப சேவையினை யாழ் மக்களுக்கு வழங்கிவருகின்றது. தற்போது அதன் 4வது வருட ஆரம்பத்தில் பல கிளை நிறுவனங்களை ஆரம்பித்து சேவையை விஸ்தரிக்கவுள்ளது.

அவ்வாறு ஆரம்பிக்கப்படவிருக்கும் கிளை நிறுவனங்கள் வடமராட்சியிலும் வலிகாமத்திலும் முதற்கட்டமாக செயல்பட உள்ளன. இக்கிளை நிறுவனங்களில் கற்கை நெறிகளை கற்க விரும்புவோர் பின்வரும் இடங்களில் 19-04-04 இல் இருந்து பதிவுகளை 9 - 5 மணிவரை மேற்கொள்ளலாம.

வடமராட்சியில் - கரவெட்டி பிரதேச சபை அலுவலகம்.
வலிகாமத்தில் - கிராம அலுவலர் அலுவலகம், (J/133), ஆனைக்கோட்டை (சந்திக்கு அருகாமையில்).

-பணிப்பாளர்



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 01 - 1928



மறைவு 29 - 04 - 2003

அமரர்
**சுப்பையா திருநீலகண்டன்**
திதி: 17.04.2004

ஆண்டொன்று மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
எம் நெஞ்சங்களில் என்றுமே மறையாது
அன்போடு பேசி பண்போடு வாழ்ந்த
உங்களது பாசமுகம் எப்போதும் எங்கள்
கண்ணில் ஓவியமாய்த் தெரிகிறதே! என் செய்வோம்!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிழல் போல் மறையாதிருக்கும்!

*வேலணை வடக்கு, வேலணை.* (30806)(34-12-18)
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

மலர்வு 24 ~ 02 ~ 1945



உதிர்வு 18 ~ 03 ~ 2004

**அமரர் அருளம்பலம் ஞானசம்பந்தன் (திரு)**

திதி: 17-04-2004 - சனிக்கிழமை

எமது குடும்பத் தலைவரின் துயரச்செய்திகேட்டு நேரில் வருகை தந்தோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(30904) (24-12-18)

*லிங்க வாசா, நவாலி வடக்கு. மானிப்பாய்.*
உங்கள் பிரிவால் துயருறும்: ஞா.சிவயோகம் (மனைவி).

# சாராய வடிசாலையாக இருந்து பின்னர் சரித்திரத்தில் இடம்பிடித்த அலரிமாளிகை

"அலரி மாளிகை" என்பது இந்த நாட்டில் பிரதமராகப் பதவி வகிப்போரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் என்பதை மட்டுமே பலர் அறிந்து வைத்துள்ளனர். அதன் ஆரம்ப கால வரலாறு குறித்துச் சுவையான தகவல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளது 'லக்பிம' வார இதழ். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

இன்று இந்த நாட்டின் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'அலரிமாளிகை' ஆரம்பத்தில் ஒரு சாராய வடிசாலையாக இருந்ததென்ற செய்தி எமக்கெல்லாம் ஆச்சரியம் தருவதொன்றாகும்.

கிடைக்கப்பெறும் தகவல்களின் படி இந்த அலரிமாளிகைக் கட்டடம் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்டதாகத் தெரியவருகின்றது. அலரிமாளிகையின் ஆரம்ப உரிமையாளராகப் பிரித்தானிய அரச குடும்பத்துடன் உறவுமுறை கொண்டிருந்த மதகுருவான டானியல் டிட்லொப் என்பவர் விளங்கினார்.

தற்போது கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அலரிமாளிகை அமைந்துள்ள பிரதேசம் அக்காலத்தில் தென்னந்தோட்டமாக இருந்துவந்தது. கடலோரத்திலிருந்து பேரைவாவி வரையான சுமார் எட்டு ஏக்கர் பிரதேசம் அந்நாள்களில் அலரிமாளிகைக்குச் சொந்தமான நிலப்பிரதேசமாகக் கருதப்பட்டுவந்தது.

அந்தநாள்களில் இத்தென்னந்தோட்டத்திலிருந்த தென்னைகளிலிருந்து இறக்கப்பட்ட கள்ளை உபயோகித்து அக்கட்டடத்திலிருந்த வடிசாலையில் சாராயம் தயாரிக்கப்பட்டு வந்தது. அந்தவேளையில், அக்கட்டடம் 'டீ பிராண்டி' என்ற பெயரில் குறிப்பிடப்பட்டு வந்தது. கொழும்பைச் சூழவிருந்த ஒல்லாந்துப் போர்வீரர்கள் தமக்குத் தேவைப்படும் மதுபானத்தை வாங்க இக்கட்டடத்தை நாடி அடிக்கடி வந்து சென்றதாகத் தெரிய வருகின்றது.

ஒல்லாந்தரின் நிர்வாகத்தினின்றும் நாட்டின் கரையோரப் பகுதிகள் ஆங்கிலேயர்களின் நிர்வாகத்துக்குக் கைமாறிய பின்னரும், தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பாத பல ஒல்லாந்துப் போர்வீரர்கள் பிரித்தானிய நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்தும் இங்கு சேவையாற்றியதாகக் கூறப்படுகின்றது.

அவ்வேளையில், இலங்கையின் ஒல்லாந்த கவர்னராகவிருந்த விலம் வன்டகுறொப்பின் உறவினரும், தென்னாபிரிக்காவின் கேப் பிரதேசத்தின் ஒல்லாந்த கவர்னராகவிருந்த கொரனேலியஸ் ஜேக்கப் வன்டகுறொப்பின் மகளுமாகிய அக்னஸ் கிளாரா வன்டகுறொப்பின் கணவரான பற்றிக் பரன் வயிலஸ்ஸும் இவ்விதம் பிரித்தானிய நிர்வாகத்தின் கீழ் கடமையாற்ற விரும்பிய ஒல்லாந்தர்களில் ஒருவராவார். பிரித்தானிய சிவில் சேவையில் இணைந்து கொள்வதற்கு முன்னர் இவர் ஒல்லாந்த இராணுவ சேவையில் கடமையாற்றி வந்தார். இவர் 1803 ஆம் ஆண்டில் இன்றைய அலரிமாளிகையில் வசிக்க ஆரம்பித்தார்.

அந்தவேளையில், இன்று நாம் காணும் காலி வீதி அமைக்கப்பட்டிருக்கவில்லை. அந்தச் சமயத்தில் கொழும்பு நகரில் ஒட்டுமொத்தமாக 28ஆயிரம் பேரே வசித்து வந்தனர். அவர்களில் இராணுவ வீரர்களும் அவர்களது குடும்பத்தினருமென ஆறாயிரம் பேர் அடங்கியிருந்தனர்.

இவ் அலரிமாளிகை அமைக்கப்பட்ட பின்னரே அதாவது 1880ஆம் ஆண்டிலேயே காலிமுகத்திடல் ஹோட்டல் கட்டிமுடிக்கப்பட்டது. இன்று நாட்டின் தனவந்தர்களும், முக்கிய அரச அதிகாரிகளும் வசிக்கும் கறுவாக்காட்டுப் பகுதி அக்காலத்தில் கறுவாக்காடுமண்டிக் காணப்பட்டது. அக்கால சிவில் சேவை அதிகாரியான ஜோர்ஜ் ஆபண்ட் என்பவரின் கருத்துப்படி, அந்தக் கால கட்டத்தில் கொழும்பு நகரத்தில் ஒரேயொரு மாடிக் கட்டடமே இருந்ததாகவும் அதுவே இந்த அலரிமாளிகை எனவும் தெரிய வருகின்றது.

ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழ் பிஸ்கால் மற்றும் பிஸ்கால் நீதிவானாகக் கடமையாற்றிய பற்றிக் புருண் மைலியஸ் பின்னர் மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார். அக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அடிமை முறை தொடர்பாக அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் பிரித்தானிய அரச பீடத்தில் குறிப்பிடக்கூடிய அளவு தளர்வு நிலை உருவாகக் காரணமாயிற்று. இதன் தொடர்ச்சியாக 1805ஆம் ஆண்டளவில் அவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். அவர் காலியில் தற்கொலை செய்து கொண்டாரென ஒரு சிலர் கருதினர். ஆயினும, அவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்ததாக அரசவர்த்தமானியில் செய்தி வெளியிடப்பட்டது.

1805ஆம் ஆண்டில் பற்றிக் பரன் மரணமடைந்ததையடுத்து அலரிமாளிகையை ஹென்றி பீற்றர் ஜோன் லெயார்ட் என்பவர் விலைக்கு வாங்கினார். அலரிமாளிகையில் குடியேறிய முதலாவது ஆங்கிலேயர் என்ற கௌரவம் ஹென்றி பீற்றர் ஜோன் லெயார்ட்டுக்கு கிடைத்தது. அதுமட்டுமன்றி, மேல்மாகாண அரச அதிபராகக் கடமையாற்றிய அவரது சேவையைக் கௌரவிக்கும் பொருட்டு கொழும்பு 14இல் உள்ள வீதியொன்றுக்கு 'லெயார்ட்ஸ் புறோட்வே' எனப் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் நீதிபதியும், சுங்கத்திணைக்களத்தின் அத்தியட்சகருமான சார்ல்ஸ் எட்வேட் லெயார்ட்ஸ்"க்கு இந்த அலரிமாளிகை சொந்தமானது. அவர் 26பிள்ளைகளுக்குத் தந்தை என்பது சுவாரஸ்யமான தொரு தகவலாகும்.

1830ஆம் ஆண்டில் அலரி மாளிகை அந்தவேளையில் கறுவா உற்பத்தித் திணைக்களத்தின் அத்தியட்சகராகக் கடமையாற்றிய ஜோன் வல்பியோப்பின் உடைமையானது. அவரது மரணம் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் புதுமையான

வியெஸ்ரி

கதை உலாவியது.


ஜோன் வல்பியோப்பின் மனைவி பேரழகியாகத் திகழ்ந்தார். அவருக்குக் கள்ளக் காதலனொருவருடன் தொடர்பு இருந்துவந்தது. ஒரு நாள் ஜோன் வல்பியோப்புக்கு தனது மனைவியின் கள்ளக்காதல் தொடர்பு தெரியவந்தது. அவ்வேளையில் அவர் தனது மனைவியின் கள்ளக் காதலனைத் தன்னுடன் நேருக்கு நேர் போரிட வருமாறு சவால் விடுத்தார் என்றும் அதனை அவன் சவாலாக ஏற்றுக்கொண்டான் என்றும் பின்னர் அலரிமாளிகையின் முன்புறமுள்ள திறந்த புல்வெளியில் அவ்விருவரும் நேருக்கு நேர் மோதிக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அச்சண்டையில் ஜோன் வல்பியோப் உயிரிழக்க நேர்ந்தது.

1834 இல் மேல்மாகாண அரச அதிபராக இருந்த சீ.ஆர்.புல்வேர்ஸ் என்பவரின் கைக்கு அவ்வீடு மாறியது. யானை வேட்டையில் ஈடுபடுவது அவரது பொழுதுபோக்காக இருந்தது. கண்டி தலதாமாளிகையில் வைக்கப்பட்டிருந்த வாத்தியக்கருவி மற்றும் யானைத் தந்தம் என்பன களவாடப்பட்ட சம்பவத்தில் அவர் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. ஆயினும், இன்று கொழும்பு 7இல் உள்ள தற்போது பௌத்தாலோக மாவத்தை என அழைக்கப்படும் பிரசித்தமான பகுதி அன்று அவரது பெயரால் புல்லர்ஸ் மாவத்தை எனப் பெயர் சூட்டப்பட்டது.

கிறிஸ்தோபர் எலியஸ் என்ற ஜரிஸ்காரர் 1848இல் இந்த அலரி மாளிகையை விலைக்கு வாங்கினார். ஆரம்பத்தில் வைத்தியராகத் தொழில் பார்த்து வந்த அவர் பின்னர் 'சிலோன ஒப்சேவர்' என்ற பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

அந்தவேளையில், இலங்கையின் கவர்னராகக் கடமையாற்றி வந்த டொறிங்டன் என்பவரின் நடவடிக்கைகள் குறித்து கிறிஸ்தோபர் எலியஸ் தனது பத்திரிகை மூலம் எப்போதும் விமர்சித்து வந்தார். 1848ஆம் ஆண்டில் மாத்தளையில் இடம்பெற்ற கிளர்ச்சியைக் கவர்னர் டொறிங்டன் அடக்கிய விதத்தை அலரி மாளிகையில் இருந்தவாறே கிறிஸ்தோபர் எலியஸ் அவதானித்து ஆச்சரியப்பட்டார்.



அலரிமாளிகையின் நுழைவாசல்

1856இல் பெரும் கோப்பித் தொழிற்சாலையொன்றின் உரிமையாளரான ஜோன் பிலிப் கிறீன் என்பவர் 2 ஆயிரத்து 300 பவுணுக்கு அலரிமாளிகையை விலைக்கு வாங்கினார். அலரிமாளிகையில் இன்று காணக்கூடியதாகவுள்ள வீட்டுத் தோட்டத்தை ஜோன் பிலிப் கிறீனே உருவாக்கினார். இந்த அலரிமாளிகைக்கு அப்பெயர் வரக்காரணமான அலரி மரங்களை முதன்முதலில் அங்கு நட்டுப் பராமரித்தவர் என்ற பெருமையும் இந்த ஜோன் பிலிப் கிறீனையே சாரும்.

ஜோன் பிலிப் கிறீனின் சகோதரரான ஸ்டனி பொத் கிறீன் என்பவர் ஆயிரத்து 600 பவுண் செலவில் அலரிமாளிகைக் கட்டடத்தில் ஐஸ் உற்பத்தி நிலையமொன்றை உருவாக்கினார். இலங்கையின் வரலாற்றில் முதன்முதலாக ஐஸ்கட்டி மற்றும் குளிர்பானங்கள் என்பன அலரிமாளிகைக் கட்டடத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்பட்டன.

ஸ்டனி பொத் கிறீன் இந்த ஐஸ் உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்த போதிலும், காலப்போக்கில் அது ரென்ட் அன்ட் ஹென்டேஸ்ஸன் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. ஸ்டனி பொத் கிறீன் இறந்த பின்னர் இந்த அலரிமாளிகை பிரசித்த ஏலத்தில் விடப்பட்ட வேளையில், ரென்ட் மற்றும் ஹென்டர்சன் நிறுவனத்தின் உரிமையாளர்கள் அதனை ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கு விலைக்கு வாங்கினர்.

அலரிமாளிகையை ஹென்டெர்சன் விலைக்கு வாங்கியபோதிலும், அவரால் நீண்டகாலம் அங்கு வசிக்க முடியவில்லை. 1899 ஆம் ஆண்டில் ஹென்டெர்சன் நிறுவனத்திடமிருந்து அவ்வேளையில், லெப்டினன்ட் கவர்னராயிருந்த சேர்.எட்வேட் அலரிமாளிகையை வாடகைக்குப் பெற்றுக் கொண்டார்.

இவ்வேளையில் இந்த அலரிமாளிகையை 75ஆயிரம் ரூபா விலை கொடுத்து வாங்குவதென ஆங்கிலேய அரச நிர்வாகம் தீர்மானித்தது. ஆயினும், ஆகக்கூடிய தொகையாக 90 ஆயிரம் வரையில் செலுத்தவும் ஆங்கில அரசு தயாராயிருந்தது.

இதன் தொடர்ச்சியாக 90 ஆயிரம் ரூபா விலையாகச் செலுத்திய தன் பேரில் 1903 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பிரித்தானிய அரசரான ஏழாவது எட்வேட்டுக்கு ஹென்டெர்சன் நிறுவனத்தினால் அலரிமாளிகையும், அது அமைந்திருந்த நிலப்பகுதியும் கையளிக்கப்பட்டன. அவ்வேளையில், அலரிமாளிகையை விலைக்கு வாங்கிய மகிழ்ச்சியைக் கொண்டாடும் பொருட்டு ஒழுங்குசெய்யப்பட்ட இராப்போசன விருந்தில் அந்த வேளையில், இலங்கை கவர்னராகவிருந்த வெஸ்ட் றிட்வேயும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

உண்மையில் அலரிமாளிகை அமைந்திருந்த நிலப்பகுதி ஆறரை ஏக்கர் விஸ்தீரணமானது எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், அதனை விலைக்குப் பிரித்தானிய அரசு வாங்கியவேளையில், அளந்து கணக்கிடப்பட்டதன்படி, அது நாலு ஏக்கரும் 8 பேர்சஸும் மட்டுமே கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது. டிரன்ட் மற்றும் ஹென்டெர்சன் நிறுவனத்தினரால் ஐஸ் உற்பத்தி முயற்சிக்குப் பாவிக்கப்பட்ட கட்டடம் பின்னர் நீலத் தோட்டத் தொழிற்சாலை என்ற பெயரில் தேயிலை பதனிடும் தொழிற்சாலையாக மாற்றப்பட்டு டிரன்ட் மற்றும் ஹென்டெர்சன் நிறுவனத்தின் வசமே இருந்துவந்தது. பின்னொரு சமயம் அக்கட்டடம் பாட்லீட் நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

சேர் எட்வேட்டைத் தொடர்ந்து சேர் அலெக்சான்டர் அஸ்மோர் அலரிமாளிகையைத் தனது வசிப்பிடமாக ஆக்கிக் கொண்டார். அதன்பின்னர் அரசுச் செயலராகக் கடமையாற்றிய ஹர்பர்ட் வேய்ஸ் அலரிமாளிகையில் வகிக்கநேர்ந்தது. அவருக்குப் பின்னர் றெயினோல்ட், எட்வேட், ஸ்ராஸ் சேர் கிறீம் தொம்சன், சேர் சிசில் கிளேமன்ட் ஆகியோரும் அலரிமாளிகையில் வாழ்ந்துள்ளனர்.

இலங்கையில் டொனமூர் அரசமைப்பு அறிமுகம் செய்யப்பட்டமையைத் தொடர்ந்து அலரிமாளிகை பிரதம செயலகர்களின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமாக மாற்றப்பட்டது. அதன்படி 1933 ஆம் ஆண்டில் சேர் பிரான்சிஸ் கிறீம் டிறிலர், பின்னர் மக்ஷிவல் வெதர்பன், ஜீ.எஸ்.வூட்மன் மற்றும் சேர் றொபேட் டிறேற்றன் ஆகியோரும் கடைசியில் 1947 ஆம் ஆண்டளவில் சேர் சார்ல்ஸ் கொலின்ஸ்சும் இந்த அலரிமாளிகையைத் தமது உத்தியோகபூர்வமான வாசஸ்தலமாக உபயோகித்துள்ளனர்.

1948ஆம் ஆண்டு நெருங்கிய வேளையில் இலங்கை சுதந்திரமடையும்வேளை உருவாகி வந்த தருணத்தில் இந்த அலரிமாளிகையைப் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக மாற்றிக்கொள்வதற்கு அவசியமான புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 75விருந்தாளிகள் ஒரே சமயத்தில் உட்கார்ந்து உணவருந்தக் கூடியவகையில் 74 அடி நீளமும் 20அடி அகலமுமாக உணவருந்தும் கூடம் விஸ்தரிக்கப்பட்டது. விருந்தினர்கள் தங்குவதற்கு வசதியாகக் குளிரூட்டப்பட்ட அறை வசதிகள் கொண்ட புதிய கட்டடமொன்றும் நிர்மாணிக்கப்பட்டது.

1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி சுபவேளையொன்றில் இலங்கையின் முதற்பிரதமரான டீ.எஸ். சேனநாயகா இந்த அலரிமாளிகையில் வசிப்பதற்குப் பிரவேசித்தார்.

குதிரைச் சவாரியின்போது குதிரையிலிருந்து வீழ்ந்ததன் காரணமாக டீ.எஸ்.சேனநாயகா மரணமானதைத் தொடர்ந்து ஐந்து நாள்களாக இந்த அலரிமாளிகையில் எவரும் தங்கியிருக்கவில்லை. அதன் பின்னர் டட்லி சேனநாயகாவுக்கு உத்தியோகபூர்வமாக அங்கு தங்கும் சந்தர்ப்பம் கிட்டியது. அவருக்குப் பின்னர் பிரதமராகப் பதவியேற்ற ஜோன் கொத்தலாவலை அலரிமாளிகையில் வசிக்காததோடு அதனை உத்தியோகபூர்வ கடமைகளை மேற்கொள்ளும் இடமாக மட்டும் பாவிக்கத் தொடங்கினார். இரண்டாவது எலிசபெத் மகாராணி இலங்கைக்கு விஜயம் செய்தவேளையில், அலரிமாளிகையில் மூவாயிரத்துக்கும் அதிகமான உயர்வர்க்க பிரமுகர்களுடனான சந்திப்பு நிகழ்வொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

1956ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க பிரதமர் பதவி ஏற்றதைத் தொடர்ந்து அவர் அலரிமாளிகையைத் தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலமாக ஆக்கிக்கொண்டார். அவரது திடீர் மரணத்தையடுத்துப் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற விஜயாநந்த தகநாயகாவும் தாம் பிரதமராகப் பதவியிலிருக்கும் வரை அலரிமாளிகையிலேயே வசித்துள்ளார்.

1960ஆம் ஆண்டில் குறுகிய தொரு காலம் டட்லி சேனநாயகா அலரி மாளிகையில் வாழ்ந்த போதிலும், அதே வருடத்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றுப் பிரதமராகப் பதவியேற்றதன் மூலம் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அலரிமாளிகையில் குடியேறினார். 1965ஆம் ஆண்டில் மீண்டும் பிரதமர் பதவியைக் கைப்பற்றிக் கொண்டதன் மூலம் டட்லி சேனாநாயகா மீண்டும் அலரி மாளிகையில் குடிபுகுந்தார்.

1965ஆம் ஆண்டு டட்லி சேனாநாயகா பிரதமராக கடமையாற்றிய வேளையிலேயே முதன்முதலாக அலரிமாளிகையில் வெசாக் கொண்டாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டது மட்டுமின்றி, பொதுமக்களும் சுதந்திரமாக அலரிமாளிகைக்கு விஜயம் செய்து அதனைப் பார்த்துணர அனுமதிக்கப்பட்டனர்.

1970ஆம் ஆண்டு மீண்டும் பிரதமராகப் பதவியேற்ற ஸ்ரீமாவோ, அலரிமாளிகையை மீண்டும் தமது வாசஸ்தலமாக ஆக்கிக்கொண்டார். இதனைத் தொடர்ந்து 1971ஆம் ஆண்டில் இடம்பெற்ற கிளர்ச்சியை முறியடிப்பதற்காக அலரிமாளிகையில் கூட்டுப்படைகளின் தலைமையகம் நிறுவப்பட்டது.

1977இல் ஜே.ஆர்.ஜயவர்த்தனா அலரி மாளிகையில் ஒரு குறுகிய காலமே வசிக்க நேர்ந்தது. அவருக்குப் பின்னர் பிரதமராகப் பதவி வகித்த ஆர்.பிரேமதாசவுக்கு உத்தியோகபூர்வமாக அலரிமாளிகையில் வசிப்பதற்கு உரிமை இருந்தபோதிலும், அவர் பெரும்பாலும் 'அசரித்த' என்ற தமது தனிப்பட்ட வாசஸ்தலத்திலேயே வசித்து வந்தார். அவருக்குப் பின்னர் பிரதமராகப் பதவி வகித்த டி.பி.விஜேதுங்கவும் அலரிமாளிகையைத் தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலமாகக் கொண்டிருந்தார். 1993ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க பிரதமரானதைத் தொடர்ந்து அலரிமாளிகையில் வசிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிட்டியது. 1994இல் சந்திரிகாவுக்கு அலரிமாளிகையில் வசிக்கும் உரிமை கிட்டியபோதிலும், 2001ஆம் ஆண்டில் மீண்டும் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் மற்றொரு தடவை ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் குடியேறினார். *

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கறுப்பு நிற பஜாஜ் PULSAR விற்பனைக்கு உண்டு. தொடர்பு: "இந்திரா மாளிகை", டிஸ்பென்சரி லேன், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.(30933)

HONDA CD-125 BENLY, W.P.-H.C. - XXXX தொடர் இலக்கத்தை உடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.NO.: 0777 251002. (30920)

நல்ல நிலையிலுள்ள லான்சர் கார், ரொயாட்டா கொர்லாகார், மொறிஸ் மைனர் கார் ஆகிய மூன்று கார்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.ஹரிஹரன், 54/12, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். (30901)

பிஞ்சர்ஸ், கினிபிக்ஸ், மணிப்புறா, ஆபிரிக்க லவ்பேர்ட்ஸ போன்ற அழகிய பறவைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மனோன் மாஸரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (30943)

யாழ்ப்பாணம், 12/3, கந்தபுராண வீதி, கந்தர்மடத்தில் 2 பரப்புக் காணியும், 2 பரப்புடன் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: யாழ்.: 222 6574, கொழும்பு: 0112447010.(C/34513)

யாழ்ப்பாணம் சுதுமலை வடக்கில் 8 பரப்புக் காணி வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: V.K.சேனாதிராஜா. யாழ்.: 222 6574, கொழும்பு: 011 2447010. (C/34514)

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Broiler பேட்டுக் குஞ்சுகள் 19.04.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30953)

நல்ல இன GREAT DANE DACHSHUND நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30952)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. முழுநிறை 130/=. சுத்தம் செய்தது 200/=. கல்பேட்ஸும விற்பனைக்குண்டு. எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தாசன், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (30941)

## தவறிவிட்டது

சுன்னாகம், கந்தரோடை வீதியில் C.D பிளேயர் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.செல்வரஞ்சன், உடுவில் மகளிர் பாடசாலை, மேற்கு வீதி, சுன்னாகம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (30929)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம், கேட்டை நட்சத்திரம், 1967இல் பிறந்த, உதவி வைத்திய உத்தியோகத்தருக்குக் கௌரவமான குடும்பத்தில் மணமகள் தேவை. சீதனம் குடும்ப நிலையைப் பொறுத்துத் தீர்மானிக்கலாம் (தரகர் தேவையில்லை). விளம்பர இல. 2226, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (30860)

## தேவை

இலங்கையில் முன்னணி வகிக்கும் கணனி நிறுவனமொன்றின் யாழ். கிளையினை நிறுவுவதற்கு நகரின் மத்தியில் அல்லது அண்மையாக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வீடு தேவை. தொடர்பு: 021 222 6933 (சி-34488)

## வாடகைக்கு

முனீஸ்வரா வீதியில் ENT கிளினிக் மேல்மாடியில் புதிதாக அமைக்கப்பட்ட 4 அறைகளும் பல்கனியும் வாடகைக்குண்டு. நிறுவனங்கள், கணனிப் பயிற்சி நிலையம் முதலியவற்றுக்கு உகந்தது. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. தொடர்பு: T.பொன்னம்பலம், T.P.: 222 2792. பார்வையிடும் நேரம்: சனி, ஞாயிறு பி.ப. 4.00 மணிக்குப் பின். (30934)

### இசைக் குறிப்புகள்

வீணை, வயலின், ஓகன் போன்ற இசைக் கருவிகளுக்கான புதிய சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள் பாகம் 24வரை வெளிவந்துள்ளன.

S.S.ரஜீந்திரன்
"கரவீணா இசைமன்றம்",
73, கோவில் வீதி, நல்லூர்.
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m நெற்கே)
T.P.: 0777031293 (30945)

# மனமார வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவனும் திருமறைக் கலாமன்ற இளையோர் இலக்கிய அவை மற்றும் இசைப் பயிலகப் பொறுப்பாளருமான

**செல்வன் குணரட்ணம் அற்புதராஜா**

27.03.2004 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 23 ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணி (B.FA.) பட்டம் பெற்றதையிட்டு அவரை மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
★ ம.யேசுதாசன். ★ ஜீ.பி.பேர்மினஸ்.
★ அ.பேக்மன் ஜெயராஜா. ★ என்.எஸ்.ஜெயசிங்கம்.

(30936)(40-13-17-24)

# நியூ லக்சுமி சில்க்

## *குலுக்கல் முடிவுகள்*

முதலாம் பரிசு - பற்றுச்சீட்டு இலக்கம் 1842
இரண்டாம் பரிசு - பற்றுச்சீட்டு இலக்கம் 1928
மூன்றாம் பரிசு - பற்றுச்சீட்டு இலக்கம் 1775

6 ஆறுதல் பரிசு இலக்கங்கள்:
1987, 3011, 3233, 1773, 3199, 3019

*குறிப்பு:* பரிசுக்குரிய பற்றுச்சீட்டினை எம்மிடம் ஒப்படைத்து உங்கள் பரிசில்களைப் பெற்றுச்செல்லவும்.

**நியூ லக்சுமி சில்க்**
**பிரதான வீதி, பருத்தித்துறை.**

(சி-34512) (24-13-17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

*சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோயில், வாரிவனநாதர் சிவன் கோயில்,*
*விளைவேலி மட்டுவில் மருதடிப் பிள்ளையார் கோயில்,*
*மண்டுவில் இலஞ்சியாரண்யம் குமரகோட்டம் முருகமூர்த்தி கோயில்,*
*மீசாலை கிழக்கு பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் ஆகிய ஆலயங்களின் பிரதம குருவாகிய*

**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**

*சைவசித்தாந்த பண்டிதர் சமாதான நீதிவான் (கல்வயல் சாவகச்சேரி)*

அவர்களுக்குத் தற்காப்புக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக்கழக நுண்ணறிவு கலைப்பிரிவால் தகுதிகாண் நுண்ணறிவுக்கான கலாநிதி (Doctor) பட்டம் (The Title of Doctor of this Order International Recognition) வழங்கப்பெற்றமையையிட்டு.

மீசாலை கிழக்குப் பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் அடியார்கள் சார்பாக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில் பரிபாலனசபையினர்,
மீசாலை, கிழக்கு.

(30955) (24-13-17)

## மேலைப்புலோலியின்

## மேலான தமிழ்ப் புலவர் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் 97ஆவது ஆண்டு நினைவையொட்டி எடுக்கப்படும்

# தமிழ்ப் பெருவிழா

காலம்: **இன்று (17.04.2004) சனி மாலை 6.00 மணி**

இடம்: சதாவதானி அரங்கு, பருத்தித்துறை
(சதாவதானி சனசமூக நிலைய முன்றில்)

தலைவர்: **திரு.மு.தர்மலிங்கம் அவர்கள்**
(நிலையத் தலைவர்)

முதன்மை விருந்தினர்:
**கலாநிதி சி.சிவலிங்கராசா அவர்கள்**
(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்:
✪ **திரு.சி.புஸ்பலிங்கம் அவர்கள்**
(கோட்டக் கல்வி அதிகாரி, பருத்தித்துறை)
✪ **திருமதி சரஸ்வதி சிவனருள்சுந்தரம் அவர்கள்**
(முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை)

நிகழ்வுகள்:
- ✪ சிறப்புச சொற்பொழிவுகள்
- ✪ சிறுவர் இசை நடனங்கள்
- ✪ வழக்காடு மண்டபம்
- ✪ இன்னிசை விருந்துகள்
- ✪ இன்னும் பல சிறப்பு நிகழ்வுகள்

*தெள்ளு தமிழினை அள்ளிச் சுவைத்திட*
*வெள்ளமெனத் திரண்டு வாரீர்!*

(30947) (24-13-17) - ஏற்பாட்டாளர்கள்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
☆ சுசீலா ஆபரண மாளிகை, *பருத்தித்துறை.*
☆ ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், *பருத்தித்துறை.*
☆ சிவானந்தா புடைவையகம், *பருத்தித்துறை.*

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கீழ்வரும் உருக்குத் தளபாடங்கள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

உருக்கு அலுமாரி SWG 22 - 40
உருக்கு கோவை அலுமாரி SWG 22 - 38

கேள்விப் பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப் பணமாக ரூபா 1000/= உம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5000/= உம் பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன், சிரேஷ்ட உதவி நிதியாளரிடம் (விநியோகம்) தொடர்பு கொண்டு கேள்விப் பத்திர ஆவணங்களை 19.04.2004ஆம் திகதி தொடக்கம் 27.04.2004 ஆம் திகதிவரை காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 10.05.2004 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "உருக்குத் தளபாடங்கள் வழங்கலுக்கான கேள்விப் பத்திரம், NO.:UJ/PO/T/05/2004" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களது பிரதிநிதிகள் சமுகம் தரலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(C/34483)(34-13-17-24)

# நன்றி நவிலல்

## திருமதி இலட்சுமி சின்னத்துரை

06.04.2004 செவ்வாய்க்கிழமையன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயார் திருமதி இலட்சுமி சின்னத்துரை அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் விசேடமாக இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோருக்கும் எமது இல்லம் நாடிவந்து எமக்கு ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி, கடிதமூலம் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளாலும் உதவியும் ஒத்தாசையும் நல்கிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சி.வீரகத்திப்பிள்ளை (சட்டத்தரணி),
சி.சிவநாதன் (முகாமையாளர் இலங்கை வங்கி, நெல்லியடி) குடும்பத்தினர்.

(30950) (24-13-17)

மலர்ந்த தமிழ் புத்தாண்டில்
**வடகிழக்குத் தொழில்நுட்பமும் & யாழ். அடைக்கல அன்னை ஆலயமும்**
இணைந்து நடத்தும்

# அடிப்படைக் கணனிக் கற்கை நெறிகள்

**சிறியோர் முதல் பெரியோர் வரை முற்றிலும் தமிழ் மொழியிலேயே**

காலம் : ஒரு மாதம்
"ஆங்கில அறிவு பிரதானமல்ல"
12 வயதுக்கு உட்பட்டோர்களுக்கு 400/=
ஏனையோருக்கு 700/-
*(பங்குத்தந்தையின் சிபாரிசில் வருவோருக்கு விசேட சலுகை வழங்கப்படும்)*

✪ பாட விதானங்கள் பட்டய பொறியியலாளரின் நெறியாள்கையில் வடிவமைக்கப்பட்டவை.

✪ கற்கை நெறியின் பூர்த்தியில் பெறுமதிமிக்க சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கணனி மூலம் விளையாட்டுப் பயிற்சிகள்
மணித்தியாலத்திற்கு 25/-

Internet & E-Mail அறிவைப் பெற்றுக்கொள்ள
**INTERNET BROWSING**
மணித்தியாலத்திற்கு 40/- மட்டுமே
*(அங்கத்தவர்களுக்குக் குறைந்த கட்டணங்கள் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்)*

வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் திருமணம் மற்றும் சகல வைபவங்களையும் ஒரே நேரத்தில் Video Conferencing மூலம் கண்டுகளிக்கலாம்.
(O.L.R. திருமண மண்டபங்களில்)

Networking, LAN, WAN, SOHO & Net 2 Phone Installation செய்துகொடுக்கப்படும்.

Mobile Phones (கையடக்கத் தொலைபேசி)
விற்பனை, சேவை, திருத்த வேலைகள் & Unlocking வசதிகள்

**Net 2 Phone Rs. 10/- per min.**
வெளிநாடுகளிலுள்ள உங்கள் உறவினர்களைப் பார்த்துக்கொண்டே பேசலாம்.

கணனிகள், சகலவித திருத்தவேலைகள் புதிய P-IV கணனிகள் விற்பனைக்கு உண்டு. ஒவ்வொரு கணனியுடனும் இலவச பயிற்சியும் வழங்கப்படும். எம்மிடம் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட P-I, P-II, P-III கணனிகள் விற்பனைக்குண்டு.

இவை அனைத்தும் கண்ணியமான விலைகளில்

**இன்றைய உலகம் கணனி மயமாகிவிட்டது. உங்கள் எதிர்காலத்தைச் சற்றுச் சிந்தியுங்கள். கணனி அறிவு இல்லாதவன் கண் இல்லாதவன் போலாகின்றான். கணனி அறிவே உயர்வின் அத்திபாரம். அவ்வறிவின்றி எத்துறையிலும் நலம்பெறலாகாது. சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும்.**

தேடுங்கள் கணனியின் அறிவை.
**அறிவோம்! சிந்திப்போம்! செயற்படுவோம்!**

| | |
|---|---|
| **யாழ். அடைக்கல அன்னை ஆலயம்** | **வட கிழக்குத் தொழில்நுட்பம்** |
| ஆஸ்பத்திரி வீதி, | இல.34, சட்டநாதர் வீதி, நல்லூர், |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| ☎ 021 222 3505 | ☎ 021 222 3786 |

(சி-34487) (24-13-17)

# விடுதலைப் புலிகளின் மாபெரும் அரசியல் வெற்றி!

## முகமாலையிலிருந்து பூமாலைகள்

2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி, யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள், காலைமுதல் முகமாலைப் பகுதியில் பல்லாயிரக்கணக்கில் வந்து வந்து குவிந்து ஒன்று திரண்டனர். பலநூற்றுக்கணக்கான வாகனங்கள் யாழ். குடாநாட்டின் கண்டி வீதியில் நிரையெடுத்தன. நல்லூரிலிருந்து முகமாலை வரை மக்கள் வெள்ளம் ஆறெனப் பாய்ந்தது. வீடுகளின் வாசல் தோறும் மங்கள கும்பங்கள் வைக்கப்பட்டு குடும்பம் குடும்பமாக இளையவர்கள், முதியவர்கள் அனைவரும் பூமாலைகளோடு பல் மணி நேரங்களாகக் காத்திருந்தனர்!

### ஏன்? யாருக்காக?

ஏன் காத்திருந்தனர்? யாராவது தென்னிலங்கை மந்திரி வருகிறாரென்றா? இல்லை! பிரதமரோ ஜனாதிபதியோ யாழ்ப்பாணம் வருவதாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டதா? இல்லை! யாராவது வெளிநாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள் கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணத்துக்குள் நுழைவதாக மக்கள் அறிந்து காத்துக் கிடந்தனரா? இல்லை இல்லவேயில்லை! யாழ்ப்பாணம் இவர்களுக்காகவெல்லாம் காத்துக்கிடந்த காலம் 25 வருடங்களுக்கு முன்பே மலையேறிவிட்டது.

### ஆரத்தழுவி முத்தமிட்டு தோள்களில் சுமந்து வந்தனர்

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாண மக்கள் முகமாலையில் யாருக்காகக் காத்திருந்தனர்? யாழ்.குடாநாட்டுக்கான பிரதான தரைவழிப் பாதையூடாக யாழ்ப்பாணம் வந்த விடுதலைப் புலிகளை ஆரத்தழுவி முத்தமிட்டு தங்கள் தோள்களில் சுமந்து வரவேற்று அழைத்து வந்தனர் யாழ்ப்பாண மக்கள். ஆனந்தக கண்ணீர் சொரியும் கண்களோடு எத்தனையாயிரம் மக்கள் அங்கு திரண்டிருந்தனர்! பங்குபற்றியோர் அனைவரும் புல்லரித்து உள்ளம் கிளர்ந்து புளகாங்கிதப்பட்டுப் பரவசமடைந்தனர்!

### புலிகளின் அரசியல் அணிகளின் உள்நுழைவு

இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் கைப்பற்றிய வேளையில் வன்னிக்குள் வாபஸாகிச சென்ற விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தம்மை ஒரு அரசியல் இராணுவ இயக்கமாகத் தக்க வைத்துக் கொள்வதற்காக வன்னி மக்களின் ஆதரவுடன் வன்னிக்குள்ளே பல இராணுவ நடவடிக்கைகளை முறியடித்து, வலிந்து தாக்கும் சமர்களை முன்னெடுத்து வன்னியை விடுவித்ததுடன் யாழ்.குடாநாட்டினதும் வன்னிப் பெருநிலப்பரப்பினதும் தொடர்பு கழுத்து நிலமான ஆனையிறவையும் விடுவித்தது வரை ஏழு வருடங்களின் பின்னர் அன்றுதான் முதன்முதலாக் புலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் அரசியல் வேலைத்திட்டத்துக்காக நுழைந்தனர்.

யாழ்ப்பாணத்துக்குள் வருவதற்கு முன்பதாக 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி வவுனியா நகருக்குள்ளும் 2 ஆம் திகதி மன்னாருக்குள்ளும் 12 ஆம் திகதி மட்டக்களப்பு, திருகோணமலை நகர்களுக்குள்ளும் விடுதலைப் புலிகள் அரசியல் அணிகள் நுழைந்தன.

### வளர்ந்து சென்ற அரசியல் பரிமாணம்

வெறுமனே ஓர் இராணுவக் கூட்டமைப்பு சார்ந்த ஆயுதத் தாக்குதல்களையே முதன்மைப்படுத்தி செயற்படும் ஓர் இராணுவ இயக்கமாகவே விடுதலைப் புலிகளை சர்வதேச சக்திகள் இனம் கண்டிருந்தன. ஆனால், இலங்கையின் பன்னிரண்டாவது நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று பிரதமர் பதவியேற்று அரசாங்கத்தை அமைத்திருந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யுத்தநிறுத்தம் ஒன்றை கடைப்பிடிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைசசாத்திட்டதும் விடுதலைப் புலிகளின அரசியல் அணிகள் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் சென்று தமது அரசியல் வேலைத்திடடங்களை முன்னெடுக்கும் நிலைமை தோன்றியது. அத்துடன் திட்டமிட்டபடி பல சுற்றுப் பேச்சுக்கள் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வெளிநாடுகளில் நடத்தப்பட்டன. இந் நடவடிக்கைகளூடாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஓர் அரசியல் பரிமாணம் வளரத் தொடங்கியது.

### ஆராய்ச்சிகளும் ஐயப்பாடுகளும்

எனினும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு வடக்கு-கிழக்கு தமிழர்களின் ஏகோபித்த ஆதரவு உள்ளதா என்ற ஆராய்ச்சியில் சில சர்வதேச சக்திகள் தொடர்ந்தும் அக்கறை செலுத்தின. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைகளை தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை அறியப் பல சர்வதேச அரசியல் தலைவர்கள் ஆவலுடன் முனைந்தனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான பௌத்த பேரினவாத அரசியல்வாதிகளும் உள்ளூர் தமிழ் அரசியல்வாதிகளான ஆனந்தசங்கரி, டகளஸ் தேவானந்தா போன்றவர்களும் விடுதலைப் புலிகளுக்கு ஏகோபித்த தமிழ்மக்களின் அரசியல் ஆதரவு இல்லை என்று 'நிரூபிக்க' பலவாறாக காய்களை நகர்த்தினர். புரிந்துணர்வு நடவடிக்கையின் பின்னர் அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க இலங்கை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வந்திருந்த விடுதலைப் புலிகள் மீது சர்வதேச சமூகத்துக்குப் பல ஐயப்பாடுகளைத் தூண்டும் வகையில் புலிகளுக்கு எதிரான ஒருசில உள்ளூர் அரசியல் சக்திகள் தொடர்ந்தும் தொழிற்பட்டன.

### தேவானந்த சங்கரிகளின் குற்றச்சாட்டுகை

அரசியல் வேலைத்திட்டம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் தமது படைக்கு ஆள்சேர்ப்பதாகவும் வரிகள் மூலம் நிதி சேகரிப்பதாகவும் ஈ.பி.டி.பி. தொடர் பிரசுரங்கள ஊடாக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன் விடுதலைப் புலிகள் மீண்டும் போரையும் அழிவையும் நோக்கி தமிழ்மக்களை அழைத்துச் செல்கிறார்கள் என்றும் அக்கட்சி பலதடவைகள் வலியுறுத்தி வந்தது. ரணில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான கடந்த காலப் பேச்சுக்களில் ஏற்பட்ட தேக்க நிலைகள் சமாதான முறிவாக மாறி மீண்டும் போர் ஆரம்பிக்காதா என்று கூட ஈ.பி.டி.பி. போன்ற அரசியல் சக்திகள் ஆவலுடன் காத்திருந்திருக்கலாம். அவ்வாறே விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகள் என்று ஏற்க மறுத்த ஆனந்தசங்கரி கூட விடுதலைப் புலிகள் மீண்டும் போருக்குள் இறங்கி நிர்க்கதிக்குள்ளாகுவர் என நப்பாசை கொண்டியங்கியிருக்கக் கூடும். விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் போர் செய்து கொண்டிருந்த காலத்தில்தான் இவ்விரு அரசியல்வாதிகளும் தமது அரசியல் வியாபாரத்துக்காக அமளிதுமளியாகக் கடை விரித்தனர். ஒருவர் முற்றாக வெளிப்படையாக விடுதலைப் புலிகளை எதிர்த்தே கடைவிரித்தார். மற்றவர் விடுதலைப் புலிகளை இடையிடையே ஆதரிப்பது போலவும் நடித்தார். இவர்கள் இருவரும் தீர்மானித்திருந்த விடயம்என்ன தெரியுமா? "புலிகளுக்கு அரசியல் தெரியாது. புலிகள் அமைப்பில் உள்ள அனைவரும் போர் செய்து சாகப்பிறந்தவர்கள்" என்ற அடிப்படையில்தான் டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி ஆகியோர் தமது அரசியல் வியூகங்களை வகுத்தனர். போர், அழிவு, சாவு, இரத்தம் என்பனவற்றின் மீது இயல்பாகவே மக்கள் சமூகங்களுக்கு உள்ள பாரிய வெறுப்பும் பயமும் இவ்விரு அரசியல்வாதிகளுக்கும் முதலீடாகியது. அத்துடன் 'விடுதலைப் புலிகளுக்கு போர் புரிய மட்டுமே தெரியும். அரசியல் தெரியாது' என்ற அவர்களது எடுகோளும் அவர்களை மேலும் உற்சாகமாக வைத்திருந்தது. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கடந்த இரு வருடங்களாக 'புலி எதிர்ப்புத் திருப்புகழை' தொடர்ச்சியாகத் தமது பிரசுரங்கள் மூலம் தமிழ்மக்கள் மத்தியல் பிரசாரப்படுத்தி வந்தார். ஆனந்த சங்கரி அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் காப்பாற்றுவது என்ற கோசத்துடன் புலிகளின் அரசியல்பலத்தின் பக்கம் நின்ற இலங்கைத் தமிழரசுக்கட்சி, இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ். - சுரேஸ் அணி) ஆகியவற்றைத் தூள பறக்க விமர்சித்தார்; எள்ளி நகையாடினார். இவ்விருவரும் புலிகளுக்கு எதிராக முன்வைத்த விமர்சனங்கள, இவர்கள் முன்வைக்கிறார்கள் என்பதற்காகவே மக்களால் அடியோடு நிராகரிக்கப்பட்டுவிட்டன என்பதை அனைவரும் இப்போது நன்கு உணர்வர்.

### புலிகள் நிரூபித்துவிட்டனர்

2004 பெப்ரவரி 7ஆம் திகதி நள்ளிரவு இலங்கையின் பன்னிரண்டாவது நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது கட்சி அரசியல் நலனகளைப் பாதுகாப்பதற்காகக் கலைத்தார். ஏப்ரல் 2ஆம் திகதி 13ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டு ஆனந்தசங்கரி நீதிமன்றம் சென்று உதயசூரியன் சின்னத்தை முடக்கியதால் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் தமிழ்த் தேசிய வழியில் நின்று, விடுதலைப் புலிகளின் அரசியல் கோட்பாடுகளை முழுமையாக ஏற்று, விடுதலைப் புலிகளின் ஏக பிரதிநிதித்துவத்தை அங்கீகரித்த தமிழ் அரசியல் கட்சிகள், பொதுஅமைப்புக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் முழுமையான நேரடி வழி நடத்தலில், விடுதலைப் புலிகளின் முழுமையான - வெளிப்படையான ஆதரவுடன் தேர்தலில் குதித்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மொத்தம் இருபத்திரண்டு ஆசனங்களை வென்றனர். விடுதலைப் புலிகள் போர்க்களத்தை நடத்திக்கண்ட வெற்றிகள மட்டுமே இதுவரை காலமும் உலகத்திற்கும், புலிகளை எதிர்க்கும் சக்திகளுக்கும் தெரிந்திருக்கும். ஆனால், ஒரு தேர்தல் களத்தில் தமது சார்பில் ஓர் அரசியல் அணியை இறக்கி, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை, ஜனநாயக ரீதியான வாக்குப் பலத்தைத் தமக்கும், தமது கொள்கைகளுக்குமான மக்களின் பலமான பங்களிப்பை விடுதலைப் புலிகள் சர்வதேசத்திற்கும், உள்ளூர் சக்திகளுக்கும் நிரூபித்துக்காட்டியுள்ளனர்.

### போராட்டத்துக்கான மாபெரும் ஜனநாயகபலம்

விடுதலைப் புலிகளின் இருபது வருட போராட்ட வெற்றிகளுக்கு மிகப் பெரிய ஜனநாயக அரசியல் பலம் இப்பொதுத் தேர்தலில் கிடைத்துள்ளது. சிங்கள அரசியல்வாதிகளும் விடுதலைப் புலிகளின் அரசியல்பலத்தைக் குறைத்து எடைபோட்ட சர்வதேச சக்திகளும் வியப்பில் ஆழ்த்தப்பட்டுள்ளன. 'விடுதலைப் புலிகளை மக்கள் பிரதிநிதிகள் என்று எப்படிக் கூறுவது, அவர்கள் ஜனநாயக ரீதியான எந்தத் தேர்தலில் நின்றார்கள்'? என்றெல்லாம் கேள்வி எழுப்பி ஆரவாரித்த 'புளிச்சல் ஏவறை' விமர்சகர்கள் வாயடைத்துப்போயுள்ளனர். ஆனந்தசங்கரி தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளார். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முன்னைய இரண்டு ஆசனங்கள் ஒன்றாகக் குறைந்துள்ளது.

### நிரந்தரமாக நின்று நீடிக்கும் ஒரு சக்தி

இப்பொதுத் தேர்தலில் ஏகோபித்த தமிழ் மக்களும் வழங்கிய ஆணை மூலமாக விடுதலைப் புலிகள் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் இராணுவ வரலாற்றில் நிரந்தரமாக நின்றுநீடித்து நிலைக்கும் ஒரு பலம் பொருந்திய சக்தியாக விளங்குவார்கள் என்பது திண்ணம். இதனை சர்வதேச நாடுகளும் தென்னிலங்கை அரசியல் சக்திகளும் உணர்ந்து கொள்வதன் மூலம் பேச்சு மேசையில் தமிழ்மக்களுக்கான உரிமைகளை வழங்கக்கூடிய பொருத்தமான தீர்வுத்திட்டத்தை முன்வைத்து இத்தீவில் நிரந்தர சமாதான சக வாழ்வைக் காணமுடியும்.

### சமாதானப் பேச்சுக்கள்?

நடந்து முடிந்த பதின்மூன்றாவது பொதுத்தேர்தலின் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. போன்ற பல்துருவ சக்திகளின் ஆசனங்களின் கூட்டிணைவின்மூலம் உருவாகும் அரசாங்கம் ஆட்சி செய்யப்போகிறது. ஓர் இந்திய விசுவாசியான மகிந்த ராஜபக்ஷ பிரதமராக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவுடன் செய்வதற்கான முன்னோடி முயற்சிகள் முன்பு ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டன. தற்போது புதிய பிரதமர் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீட்டை வெளிப்படையாக வலியுறுத்தியுள்ளார். புலிகளுடன் பேசப்போவதாக ஜனாதிபதியும் புதிய பிரதமரும் கூறிவந்தாலும் பேச்சுக்கள் மூலமான பலன்கள் மக்களுக்குக் கிடைக்குமா என்பது பொறுமையை சோதிக்கும் வினாவாகும். இந்தியத் தூதுவர் நிருபம் சென் புதிய அரசாங்கத்தின் உருவாக்கம் (Make up) தொடர்பாக தனது இராஜதந்திர முயற்சிகளை பல வழிகளில் முடுக்கிவிட்டுள்ளார். இந்திய இராஜதந்திரம் வடக்கு - கிழக்கு மக்களின் ஆணையை எவ்வளவு தூரம் மதித்துச் செயற்படுமோ தெரியவில்லை.

**டன்ஸ்ரன் லூயிஸ்**

# அறநெறியைப் பின்பற்றி வாழ்ந்தால்தான் மனிதன் புனிதனாக வாழ முடியும்

## சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தெரிவிப்பு

"மனிதன் அறநெறியைப் பின்பற்றி வாழ்ந்தால்தான் புனிதனாக வாழ முடியும். சிறிய வயதில் - பிஞ்சு உள்ளங்களில் - மாணவர்களிடம் நல்ல சிந்தனைகளை உருவாக்கிவிட வேண்டிய பொறுப்பு அறநெறிப்பாடசாலைகளுக்கும் இந்துசமய நிறுவனங்களுக்கும் இருக்கவேண்டும்."

மானிப்பாயில் நடைபெற்ற 'மருதடியான் மலர்' நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையாற்றிய இந்து விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ வித்தகர் சிவ.மகாலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்பட்டுவரும் அறநெறிப் பாடசாலை வருடம்தோறும் வெளியிடும் 'மருதடியான் மலர்' இவ்வருடம் அமரர் ந.வீரமணிஐயர் ஞாபகார்த்த மலராக வெளியிடப்பட்டது.

மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் வெளியீட்டுவிழா நடைபெற்றது

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

அறம் செய்தல், உண்மை பேசுதல், பெற்றோரை தெய்வமாகப் போற்றுதல் போன்ற எமது பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இன்று இப் பாரம்பரியங்கள் சிதைவடைந்து வருகின்றன. இவற்றுக்கான பொறுப்புக்களை நாம் ஏற்றுக்கொண்டு சீர் செய்வதற்கான வழிகளைத் தேட வேண்டும்.

இளம் உள்ளங்களிடையே நல்ல சிந்தனைகளை வளர்க்கும் பொறுப்பு சமுதாயத்துக்குரியது. அறத்துக்கு மாறான செயல்களைச் செய்யக் கூடியதான கருத்துக்களை இளைஞர்களிடையே வளரவிடக்கூடாது. அற விழுமியங்கள் எங்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும்.

நல்ல சிந்தனைகளைப் பிள்ளைகளிடத்தில் ஊட்டிவிட வேண்டிய பாரிய பொறுப்பு அறநெறிப் பாடசாலைகளுக்கும் சமய நிறுவனங்களுக்கும் உண்டு.

எமது சமய வரலாற்றுப் பொக்கிஷங்களை, ஆவணப்படுத்தும் நிலை எம்மிடையே மிகக்குறைவு. திருவிழாக்கள் நடத்துவதுபோல சமய விழாக்களை நடத்துகிறோமே தவிர, சமய வரலாறுகளை, பொக்கிஷங்களைப் பாதுகாத்து ஆவணப்படுத்தும் தன்மை எம்மிடையே இல்லை.

எமது முன்னோர் வாழ்ந்து காட்டிய நல்ல வழிமுறைகளை நாம் பேண வேண்டும். அவற்றைச் சிதையவிடக் கூடாது.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், சிறுவர்களிடையே திருமுறைகளை ஓதப்பழக்க வேண்டும். திருமுறைகளை நாம் ஓதப் பழகிவிட்டால் எம்மைச் சுற்றி உள்ள எல்லாப் பகைகளும் ஓடிவிடும். ஆலயங்களிலும் திருமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உரத்து ஓதவைக்க வேண்டும். பாடசாலைகளிலும் திருமுறைகளைத் தவறாது ஓதச் செய்ய வேண்டும். இதன் மூலம் நாம் சகல சௌபாக்கியங்களையும் அடையலாம்.

அறத்தின் வலிமையை இளைய சமுதாயம் உணருமாக இருந்தால் எமது நாடு, சாந்தியும் சமாதானமும் நிறைந்த தர்ம நாடாக விளங்கும். எனவே, அறநெறிச் சிந்தனைகளைச் சிறுவர்களிடம் வளர்க்க வேண்டும் - எனக் கூறினார். நூலின் மதிப்பீட்டு உரையை நிகழ்த்திய இளைப்பாறிய அதிபர் சுடர் இ.மகேந்திரன் தமது உரையில் தெரிவித்ததாவது:-

வெறும் பேச்சுக்களாலும் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்குவதாலும் மட்டும் எமது சமயநெறிகளை வளர்த்து விட முடியாது. பெற்றோர்களை, ஆசிரியர்களை மதித்தல், எக்காரணம் கொண்டும் மாமிசம் புசிக்காதிருத்தல், பசுவதையை நீக்குதல் போன்ற அறநெறிச் செயற்பாடுகள் மூலம்தான் சமயத்தை வளர்க்கமுடியும் - எனக் கூறினார்.

அறநெறிப் பாடசாலை நடத்திய சமயப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன.

(ம-152)

## 'பாண்ட்' அணி அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

மக்கள் நலன்புரிச் சங்கப் படையணிகளால் விசேட முதலுதவிப் படையணி உறுப்பினர்களைக் கொண்டு யாழ். மாவட்ட 'பாண்ட்' அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெற்றது. அணியில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தின் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதியினால் சின்னம் சூட்டப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தின் 35 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 350 மாணவர்களுக்கான பயிற்சிப் பாசறை ஆரம்பமாகிக் கடந்த 11 ஆம் திகதி வரையான நான்கு தினங்கள் இடம் பெற்றது.

இதில் இடம்பெற்ற பலவிதமான பயிற்சிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பயிற்சிப் பாசறையில் கலந்துகொண்ட பாடசாலைகளில் புள்ளிகளின் அடிப்படையில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் ஆகியன முதல் ஐந்து இடங்களையும் பெற்றுக்கொண்டன. பாசறையின் நிறைவில் மாணவர்களுக்குக் கேடயங்களும் வழங்கப்பட்டன.

(ம-19)

## பனை அபிவிருத்திச் சபை,
### புழுக்கொடியல், நார்க்கடகம் கொள்வனவு

புதிய தரமான பொருள்கள் கொள்வன்வு செய்யப்படுகின்றன.

புழுக்கொடியல் கிலோ 50.00

நார்க்கடகம் (10 ஓலை சாதாரணம்) 100.00

*மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

சந்தைப்படுத்தும் பகுதி,
பனை அபிவிருத்திச் சபை,
*859, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
*53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ. இல:* 222 2034.

(C/34490)(34-12-16)


## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களுக்குமான விரிவுரைகள் நாளைமறுதினம் திங்கள் ஆரம்பமாகவுள்ளன எனப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தினை முன்னிட்டு கடந்த சில வாரங்களாக அறிவிக்கப்பட்டிருந்த விடுமுறையினை அடுத்தே திங்கள் முதல் விரிவுரைகள் நடைபெறவுள்ளன. (எ-6)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

31ஆம் நாள் | 60ஆம் நாள்





அமரா **திருவருள் குலசிங்கம்** | திருமத **குலசிங்கம் கமலேஸ்வரி**

15-04-1929 ← மலர்வு → 21-06-1935

20-03-2004 ← உதிர்வு → 11-02-2004

*அருள், தங்கம் பெற்றெடுத்த குலவிளக்கே குலசிங்கம்!*
*சிங்கங்கள் அறுவருடன் அவதரித்த அருமைச் சோதரனே!*
*கடைக்குட்டி சோதரிக்கு கனகம் தவிர்ந்தாலும்*
*கனிவாக நடந்து சென்றீர் என்றென்றும்*
*உமது நினைவு நீங்காது!*
*துயர்காணும் உம்முடன் பிறப்பால் இணைந்து*
*நிற்கும் உம் அருமைச் சோதரி!*

*மணமேடை அலங்கரிக்க அண்ணி என*
*வந்துதித்த என்னினிய மச்சாளே!*
*என் பிறப்பால் ஒன்றிணைந்த என்*
*அண்ணாவின் ஆருயிர் பத்தினியே!*
*என் அண்ணாவின் துயர் துடைக்க*
*உங்களுடன் இணைத்துவிட்டீர்.*

20.03.2004 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 19.04.2004 திங்கட்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு, நண்பகல் நிகழும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'அருளகம்', பன்னாலை,*
*தெல்லிப்பழை.* (30938) (24-12-18)

அன்பாக நினைவு கூரும்:
**சகோதரர்கள், சகோதரி, மக்கள், மருமக்கள்.**



## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7141253 முதல் 7143105 வரை

சீட்டிழுப்பு இல. 24 திகதி 15-04-2004

வெற்றி எண்கள் **6 6 1 7 2 8** சுப்பர் எண் **22**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,75,04,475/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| [illegible] | - | 1,75,04,475/- | - |
| [illegible] | - | 10,00,000/- | - |
| [illegible] | 2 | 50,000/- | 1,00,000/- |
| [illegible] | 16 | 5,000/- | 80,000/- |
| [illegible] | 158 | 500/- | 79,000/- |
| [illegible] | 1,616 | 50/- | 80,800/- |
| [illegible] | 15,984 | 10/- | 1,59,840/- |
| [illegible] | - | 5,000/- | - |
| [illegible] | 18 | 1,000/- | 18,000/- |
| [illegible] | 164 | 100/- | 16,400/- |
| [illegible] | 1,595 | 20/- | 31,900/- |
| மொத்தம் | 19,553 | | 5,65,940/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 5,65,940/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. **1,75,49,325/-**

தொடர் இல. 6096154 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஏப்ரல் 19 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**7142022-0-46**
**7142726-1-27**
**7142381-6-23**
**7142296-9-44**
**7142299-6-48**

அபிவிருத்தி லொத்தர் சபை,
இல. 11, செயிற் மைக்கேல்ஸ் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



## பண்டிகைக் கால விசேட சலுகை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

**ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=**

இச்சலுகை 12.04.2004 தொடக்கம் 18.04.2004 வரை மட்டுமே

## ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்

T.P: 021 222 2670
Fax:021 222 3214,
E.Mail: del-smskr@eureka .lk



## பண்டிகைக் கால விசேட சலுகை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

**ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=**

இச்சலுகை 11.04.2004 தொடக்கம் 18.04.2004 வரை மட்டுமே

## திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக)
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

T.P: 021 222 7310, 7555, 7560
Fax:021 222 7310,
E.Mail: thirumurugan@edoramail.com



## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 12 - 05 - 1927



மறைவு 14 - 03 - 2004

### அமரர் பழனி தர்மராசா

அன்பு காட்டி ஆதரித்த அன்புத் தெய்வமே !
ஆத்மா சாந்திபெற அண்டவனை வேண்டுகின்றோம்.

அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (17.04.2004) சனிக்கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், நண்பர்கள் அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.


*வைரமஹால்,*
*வதிரி.* (30939)(12-18)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 21 - 03 - 1931



மறைவு 18 - 03 - 2004

### அமரர் ஆறுமுகம் இராசையா

அன்புக்கோர் அணிகலனாய் பண்புடன் வாழ்ந்த
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (17.04.2004) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். எனவே, இந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.* (30961) (12-18)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

# சனசமூக நிலையங்கள் கட்டுக்கோப்புக்குள் இயங்கும்போது கிராமிய மட்டத்தில் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்

வரணி,ஏப்.17

கிராமிய மட்டத்தில் இயங்கும் சனசமூக நிலையங்கள் அடிமட்டத்தில் மக்களுடன் பின்னிப்பிணைந்தவை. அதன் தலைவர், செயலாளர் மற்றும நிர்வாகிகள் யாவரும் ஒற்றுமையாக இயங்கினால் பொதுமக்களின் உதவி கிடைப்பதோடு கிராமியமட்டத்தில் எழும பிரச்சினைகளையும் தீர்க்கமுடியும். அதேபோல, அவர்களினால் பல நன்மையான திட்டங்களையும் செயற்படுத்தமுடியும்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற அப்பிரதேசசபையின் சனசமூக நிலையங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் விசேட பிரதிநிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய தென்மராட்சிப் பிரதேச சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெகதீசன் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேசசபை செயலாளர் என். பாலச்சந்திரன் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

நூல்நிலையங்கள் பாலர்வகுப்பு, விளையாட்டுக்கழகம், நூல்கள் இவற்றைக் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். பாடசாலை தவிர்ந்த நேரங்களில் நூல்நிலையங்களை மாணவர்கள் நாடுவதால் அவர்களின் அறிவுத்தேவை பூர்த்திசெய்யப்படுவதோடு தேவையற்ற வீண் பிரச்சினைகளும் இதனால் தவிர்க்கப்படுகின்றன - என்று சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அங்கு மேலும் தெரிவித்தார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, சமாசத் தலைவர் க.இராசரத்தினம், செயலாளர் செ.ஆனந்தரஞ்சன் மற்றும் தென மராட்சி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர் க.சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோரும் உரையாற்றினர். (ஐ-170)

## நியமனம் வழங்கப்படாதது குறித்து ஆசிரிய மாணவர் விசனம் தெரிவிப்பு

கோப்பாய்,ஏப்.17

தேசிய கல்வியியற் கல்லூரிகளில மூன்று ஆண்டு டிப்ளோமா கற்கை நெறியைக் கடந்த டிசெம்பர் மாதத்துடன் பூர்த்திசெய்த ஆசிரிய மாணவர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை என ஆசிரிய மாணவர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

பயிற்சிக்காலம் நிறைவடைந்து ஐந்துமாதங்கள் கடந்துள்ள நிலையிலும் நியமனம் கிடைக்காதது தமக்கு பெரும் மனஉளைச்சலைத் தந்துள்ளது என்றும் -

ஆசிரிய நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வேறு தொழில் முயற்சிகளை நாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - ஆசிரிய மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு ஆசிரிய நியமனத்தை எதிர்பார்த்திருப்பவர்களில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த 130 பேர் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-72)

## அமைச்சுகளுக்குப் புதிதாக செயலாளர்கள் நியமனம்

### தீவிரமாகப் பரிசீலிக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஏப்.17

புதிய அரசின் அமைச்சுகளுக்கு செயலாளர்களை நியமனம்செய்யும் ஏற்பாடுகள் அடுத்தவார இறுதிக்குள் பூர்த்திசெய்யப்படும் என்றும் -

நியமனம் செய்யப்படவுள்ள புதிய செயலாளர்கள் தொடர்பான விவரங்களை ஜனாதிபதி தற்போது ஆராய்ந்து வருகின்றார் என்றும் -

ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

தற்போது அமைச்சுக்களில் கடமையாற்றும் பெரும்பாலான செயலாளர்கள் வேறு அமைச்சுக்களுக்கு இடமாற்றப்படவுள்ளனர் என்றும் -


பொதுநிர்வாக சேவை அமைச்சின் நிர்வாக சேவைகளில் கடமையாற்றும் அதிகாரிகள் சிலரும் கூட அமைச்சுக்களின் புதிய செயலாளர்களாக நியமனம் செய்யப்படவுள்ளனர் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (எ)

### வீதி புனரமைப்பு

அரியாலை,ஏப்.17

யாழ். பொது நூலகத்துக்கு அருகில் -- யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து முற்றவெளி நோக்கிச் செல்லும் வீதி, தார் ஊற்றிப் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

இந்த வீதி முன்னர் போக்குவரத்துச் செய்யமுடியாதவகையில் குண்டுங் குழியுமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8-17)



யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 150 மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் அண்மையில் ஆத்மீகபோதனை வழங்கப்பட்டது. அதன் பின் அவர்களுக்கு வங்கி சேமிப்புப் புத்தகம், பாடசாலை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (ஐ)

### இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி

கோப்பாய்,ஏப்.17

கோப்பாய் இளைஞர் சேவை மன்றத்தினால் இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கபபட்டது.

தட்டச்சு, தையல்பயிற்சி, கேக் ஐசிங், பிறமொழி பயிற்சி போன்ற நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருவதாகவும் ஆர்வமுள்ளோர் தம்முடன் தொடர்புகொண்டு பயிற்சி நெறியில் இணைநது பயன்பெறலாம் என்றும் - மன்றத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (எ-72)

### சாவகச்சேரி தபாலகத்துக்கு புதிய தபாலதிபர்

வரணி,ஏப்.17

சாவகச்சேரி தபால் அதிபராக பொ.தெய்வேந்திரன் அண்மையில் பொறுப்பேற்றுள்ளார். முன்னர் தபால் அதிபராகக் கடமைபுரிந்த கே.சபாரதத்தினம் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்து புதிய தபால் அதிபராக இவர் பொறுப்பேற்றுள்ளார். சாவகச்சேரி தபாலகம் கடந்த யுத்த காலகட்டத்தில் முழுமையாகச் சேதமடைந்து இருந்தது. தற்சமயம் தபால் திணைக்களம் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் இதைப் புனரமைத்ததைத் தொடர்ந்து புதிய கட்டடத்தில் இயங்குவது குறிப்பிடத்தக்கது. (ஐ-8-170)

### மாதாந்தக் கலந்துரையாடல்

வரணி,ஏப்.17

அபிவிருத்திக்கான சமூக அமைபபுககளின் வலையமைப்பின், சனசமூக நிலைய சமாச நிர்வாகிகளுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு மேற்படி வலையமைப்பின் காரியாலயத்தில் நடைபெறும் என அமைப்பின் இணைப்புச் செயலாளர் செல்வி இபிரசாந்தினி தெரிவித்துள்ளார். இதே வேளை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் யுஎன்எச்சிஆரின் யாழ். மாவட்டப் பிரதிநிதி கேசிசூசி முரட்டா கலந்துகொள்வார் என தெரிவிக்கப்பட்டது. (ஐ-8-170)

### தாய்லாந்தில் திட்டமுகாமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.17

பாங்கொக்கில் நடைபெறவுள்ள திட்டமுகாமைத்துவம் தொடர்பான பயிற்சிநெறியில் கலந்துகொள்வதற்காக யாழ்.செயலக 'நிகொட்' திட்டப் பணிப்பாளர் க.நவரட்ணராசா தாய்லாந்து செல்லவுள்ளார்.

சர்வதேச நாடுகளைச் சேர்ந்த துறைசார் நிபுணர்களால் நடத்தப்படும் திட்டமுகாமைத்துவம் தொடர்பான ஒருமாத காலப்பயிற்சி நெறி தாய்லாந்தின் தலைநகரம் பாங்கொக்கில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ஐ-5)

### சாவகச்சேரி வீதிகளுக்கு மின்விளக்குகள்

சாவகச்சேரி,ஏப்.17

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி அலுவலகம் இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக 10 லட்சம் ரூபா துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செலவிடப்படவுள்ளது. இந்த நிதி மூலம் 220 வீதி மின்விளக்குகளே பொருத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 90 ஆம் ஆண்டுக்கு முன்னர் நீர் மின்சாரம் வழங்கப்பட்ட காலங்களில் சுமார் 700இற்கும் மேற்பட்ட வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

இந்த மின்விளக்குகள் நகரிலும் ஏனைய வீதிகளின் முக்கிய இடங்களிலும் பிரதான வீதிகளிலும் யாழ். நுணாவில் சந்தியில் இருந்து கண்டி வீதியில் மீசாலை, புத்தூர்ச் சந்தி வரை பொருத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-31)

## மக்கள் முகம்



இலங்கை 'ஹெல்ப் ஏஜ்' முதியோர் நலன்பேணும் அமைப்பு 2003 ஆம் ஆண்டு நடத்திய அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில், தமிழ்மொழிமூல சிரேஷ்ட மாணவர் பிரிவில் அகில இலங்கை ரீதியில் ஏழாலை மகா வித்தியாலய மாணவி விஜயா கந்தசாமி முதலாமிடத்தைப் பெற்றுளளார். (ஐ-150)

✻ ✻ ✻ ✻ ✻



முதியோர் நலன்பேணும் அமைப்பினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் நாவற்குழி மகா வித்தியாலயத்தின் தரம் 10 மாணவியான லவப்பிரியா விநாயகமூர்த்தி வெற்றிபெற்றுள்ளார். (ஐ-10)

✻ ✻ ✻ ✻ ✻



குருநகரைச் சேர்ந்த அந்தோனி யேசுதாசன் அண்மையில் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கைக்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் தலைவராகவும் குருநகர் சனசமூக நிலையத்தின் தலைவராகவும் குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கதின் தலைவராகவும் யாழ். கிழக்கு சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபைத தலைவராகவும் சேவைபுரிந்து வருகிறார். (ஐ-51)

✻ ✻ ✻ ✻ ✻



கொழும்பு விவேகானந்தா சபையினரால் நடத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நாவன்மைப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவி சங்கவை சிவானந்தம் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். (ஐ-ரி)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் 85 பேருக்கு மூக்குக் கண்ணாடி

தென்மராட்சி,ஏப்.17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 85 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

கடந்தமாதம் இவ்வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இலவச பரிசோதனை முகாமில் கண்பரிசோதனையின்போது கண்பார்வையில் பாதிப்பு ஏற்பட்டவர்களாகக் காணப்பட்டோரில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடுமபங்களைச் சேர்ந்த 85 பேருககே மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

லயன்ஸ்கழகத்தின் பார்வைக்கு முதலிடம் பிரிவின் தலைவர் லயன் கா.நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் ந.நவரத்தினராசா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு மூக்குக்கண்ணாடிகளை வழங்கினார் என்று கழகச் செயலாளர் லயன் கா.சற்குணதேவன் தெரிவித்தார். (ஐ-117)

## விபத்துக்களில் காயமடைவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். குடாநாட்டில் வீதி விபத்துகளில் காயமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் யாழ்.ஓட்டுமடம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் யாழ்.பழம் வீதியைச் சேர்ந்த ஜெ சனா (வயது 21) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மானிப்பாய் சந்தியில் இடம்பெற்ற விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் சென்றவரான இளவாலையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் டயஸ் என்பவர் படுகாயமடைந்து போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று புலோலியில் இடம்பெற்ற கார் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவரான வேலாயுதம் - கணேசராசா இடுப்பில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

நேற்றுமுன்தினம் கோப்பாய் - மானிப்பாய் வீதியில் இடம்பெற்ற மறறொரு விபத்தில் பாலசுப்பிரமணியம் கிரிசாந்தினி (வயது12) என்ற சிறுமி காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-8-72-ரி)

## பொதுத் தேர்தல் முடிவுகள் உத்வேகம் தருகின்றன

### புளொட் அமைப்பு அறிக்கை

பொதுத்தேர்தல் முடிவுகள் எமக்கு உத்வேகத்தைத் தந்துள்ளன.

- இப்படி புளொட் இயக்கத்தின் அரசியல்பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுத் தேர்தலில் எமது கட்சிககும் அதன் கொள்கைகளுக்கும் பல சோதனைகளின் மத்தியில் மக்கள் வழங்கிய ஆதரவுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தேர்தல் மக்களுக்குச் சோதனையாக அமைந்தது போலவே ஜனநாயக உரிமைகளுக்கும் சோதனையாக அமைந்தது. இவற்றுக்கு மத்தியில் மந்தைத் தத்துவத்தின் அதீத அழுத்தங்களையும் அச்சுறுததல்களையும் மீறி எமக்குக் கிடைத்த வாக்குகள் எம்மை மேலும் மக்கள் சேவைக்குத் தூண்டுவதாகவே அமைநதுள்ளன. சிறப்பாக வன்னி மாவட்ட மக்களின் ஆதரவு எமது மனதை நெகிழ வைப்பதாக அமைந்துள்ளது.

வேலியே பயிரை மேய்ந்த கதையாக தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களில் பெருமபான்மையினர் பக்கச்சார்பாக நடந்துகொண்டதை யாவரும் அறியக்கூடியதாக இருந்தது. அவர்களின் இந்நடததைக்கு அவர்கள் மீதான அழுததங்கள் காரணமாக இருக்கலாம். இருபபினும, வரும்காலங்களில் ஜனநாயக மரபுகளுக்கும், விழுமியங்களுக்கும் உரிய மதிப்பளித்து தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதன் மூலமே ஜனநாயகத்தை தழைத்தோங்கச் செய்யலாம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். மக்களின் ஜனநாயக உரிமைகள் பங்கப்படுத்தப்படும்போது முடிவுகள் எமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. மாறாக மேலும் உதவேகத்தையே தந்துள்ளது.

புளொட் அமைப்பின் அரசியல் பிரிவினர் தொடர்ந்தும் மக்கள் நலன் சார்ந்த தமது அரசியல் பணிகளை முன்னெடுத்துச் செல்வர் என்பதைக் கூறிக்கொள்கிறோம் -

- இப்படி அதில் உள்ளது. (ஐ-9)

## ஆண்டு நிறைவு விழா

குருநகர்,ஏப்.17

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாரா யணா சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ் வுகளாக இன்று சனிக்கிழமை இல்ல மெய்வல்லுநர் போட்டியும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் சி.கர்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் திருமதி க.தெய்வந்திரன், தமிழீழக் கல்விக் கழகத்தின் யாழ்.மாவட்டப் பொறுப் பாளர் கை.கவியன்பன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10-15-51)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஏப்.17

இலங்கை சின்மயா மிஷன் ஏற் பாட்டில் 'மன்னிப்பாயா' என்ற தலைப பில் நல்லை ஆதீன மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் 22ஆம் திகதி வியாழக் கிழமை வரை நான்கு தினங்கள் தினமும் மாலை 5.30 மணிமுதல் 7மணிவரை சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

இச்சிறப்புச் சொற்பொழிவுகளை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியா சுவாமி ரமண சைத்தான்யா நிகழ்த்து வார். இந்நிகழ்வினை நல்லை ஆதன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவா மிகள் ஆரம்பித்துவைப்பார்.(10-173)

## மீள் குடியமர்வு கொடுப்பனவுக்கான பதிவுகள்

தென்மராட்சி,ஏப்.17

தென்மராட்சி பிரதேசத்தில் இது வரை உடனடி மீள்குடியமர்வுக் கொடுப பனவைப் பெறாத குடும்பங்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 25ஆம் திகதி பிரதேச செயலகத்தில் இடம்பெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 15ஆயிரம் ரூபா கொடுப பனவு பெற்று மிகுதிக் கொடுப் பனவைப் பெற்றுக்கொள்ளாத குடும் பங்களையும் அன்றைய தினம் சமூக மளிக்குமாறு பிரதேச செயலா செ.ஸ்ரீனி வாசன் அறிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட தினத்திற்குப் பின்னர் தமது சொந்த இருப்பிடங்களுக்கு மீளக்குடியமர்ந்தோரில் இதுவரை இக்கொடுப்பனவுக்கு படிவங்களில் கையொப்பமிடாதவர்களைப் பங்கீட்டு அட்டையுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவுகள் நாளை ஞாயிற் றுக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ள தாக ஏற்கனவே கிராம அலுவலர் களுக்கு அறிவிக்கப்பட்' தாகவும் பதிவுகளை ஏப்ரல் 25 ஆம் திகதி மேற கொள்ள மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வும் பிரதேச செயலர் தெரிவித்தார். (8-117)

# 31ஆம் நாள் அஞ்சலி



| தாயின் மடியில் | இறைவன் பாதத்தில் |
|---|---|
| 24 | 18 |
| 02 | 03 |
| 1945 | 2004 |

### அமரர் அருளம்பலம் ஞானசம்பந்தன்

அன்புடனும் பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து சடுதியில் மறைந்த எம் அன்புத் 'திரு'வின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

67,கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(30935)(40-21-12-19)

- குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உடைமையாகவுள்ள தும் யாழ்ப்பாணப் பொதுவைத்தியசாலைக்கு முன்பாக அமைந துள்ளதுமான காணியில் துவிச்சக்கர வண்டி கொட்டகை இரண்டாம் கட்டம் மற்றும் ஏனைய வசதிகளை நிர்மாணிப் பதற்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப் பத்திரங்களைப் பெறத் தகுதி உடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடமிருந்து 30.04.2004 வரை ஒப்பந்தப் பதிவுக்காரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் கீழே குறிப்பிடப்படும் வைப்பீடுகளுக்கான தொகையைச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 6,500/=
2. மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா 500/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 14.05.2004 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக *தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களுக்குக் கிடைக் கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவல கத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் கேள்விப் பத்திரங்களை இடலாம்.

கேள்விப் பத்திரங்களை நேரடியாகப் பார்வையிட விரும்பு வோர், உதவிப் பதிவாளர்/நிர்வாக அலுவலகத்தில் வேலை நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி பரிசீலிக்கலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம் திருநெல்வேலி.
15.04.2004

(C/3448)(34-21-12-19)

# முகாமைத்துவப் பயிற்சி

மிகத் துரிதமாக வளர்ந்துவரும் அமெரிக்க நிறுவனம் ஒன்று தனது கிளையை யாழ்.நகரிலும் வியாபிக்கும் முகமாக முகாமைத்துவப் பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு ஒன்றை நடத்த உள்ளது. வியாபாரம் முகாமைத்துவம் என்பவற்றில் ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். அடிமட்டம் இருந்து உயர்மட்டம் வரை பயிற்சி அளிக்கப் படுவதுடன் பயிற்சிக் காலத்தில் வருமானமாக 8,000-10,000 பெற்றுக்கொள்ள முடியும். துரிதமான பதவியுயர்வு, தங்குமிட வசதி (ஆண்களுக்கு) இலவசம். தொடர்புகளுக்கு தொ.பே.011 2911683.

(30909)(21-19-12)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் மண்வாசம் நினைவு நூல் வெளியீடும் பிறந்த தின நினைவு கூரலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 04 |
| – | – |
| 04 | 03 |
| – | – |
| 1918 | 2004 |

### அமரர் சி.அரியகுட்டி

(புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவர்)

04.03.2004இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (17.04.2004) காலை 10 மணிக்கு அமரரின் இல்லத்தில் நடைபெறும். அதைத்தொடர்ந்து நினைவுநூல் வெளியீடும் இடம்பெறும்.

தலைவர்: திரு.இ.சிவஞானம் J.P.
(தலைவர் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயம்)

நிகழ்ச்சிகள்:


வாழ்த்துப்பா, வரவேற்புரை, வெளியீட்டுரை, ஆய்வுரை, சிறப்புரை என்பன இடம்பெறும். கல்விமான்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அறிஞர் பெருமக்கள் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்விலும், இதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மணற்பகுதி, புத்தூர். (30917)(21-12-19)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்

### தில்லையம்பலம் அருமைநாயகம்

(இளைப்பாறிய பிரதி நிலஅளவையாளர்- நாயகம்)

ஏ வயத்துள் அறிமுகம் தெய்வத்துள் சங்கமம்

**06-04-1916 08-03-2004**

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

08.03.2004 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 41ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (17.04.2004) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே இந் நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு நண்பகல் நிகழ்கின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

எமது துயரச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடிவந்து எமக்கு ஆறு தலும், தேறுதலும் கூறிய அன்புள்ளம் கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளாலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த இதய சுத்தியுடன்கூடிய நன்றிகளைத் தெரிவித் துக்கொள்கின்றோம்.

*23, சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.*

(30924)(21-19-12)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் தரம் 'எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்த காரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி.- 2004.04.27, பி.ப. 2.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 2004.04.28, ந.ப. 12.00 மணிவரை.
கேள்விப் பத்திரம் திறந்துபார்க்கும் திகதி:- 2004.04.28, பி.ப. 3.00 மணி.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) |
|---|---|---|
| 01. ஏழு கோயில் வீதி, ஏழாலை | 5,000.00 | 575.00 |
| 02. இணுவில் மத்திய கல்லூரி வீதி | 7,500.00 | 575.00 |
| 03. உடுவில் உப அலுவலக பழுதடைந்த எல்லைச் சுவரினை மறுசீரமைத்தல் | 2,000.00 | 575.00 |
| 04. மருதனார்மடம் சந்தியில் பஸ்தரிப்பிடம் அமைத்தல் | 2,000.00 | 575.00 |

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப்பிரதியை "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும், அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்பபாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபுற மேல்மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2004.04.15

(C/3448)(34-21-12-19)

திருமதி ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 05 07 1912



மறைவு 15 03 2004

### அமரர் முருகேசு நமசிவாயம்

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.04.2004) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த வைபவத்திற்கு வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சுதுமலை மேற்கு, மானிப்பாய். (30970)(40-16-18) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பச்செட்டியார் அசோகன்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சிவன்கோவில் தர்மகர்த்தாவும், பரம்பரை உரிமையாளருமான காலஞ்சென்ற வைத்திலிங்கச்செட்டியார் கந்தப்பச் செட்டியார் அவர்களின் இரண்டாவது புத்திரன் அசோகன் அவர்கள் நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.04.2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நேரம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

160, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-34523)(38-16-18)

தகவல்: க.வைத்திலிங்கச் செட்டியார் (சகோதரன்).

### கதிரவேலு தங்கம்மா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு தங்கம்மா அவர்கள் நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிக்குட்டியின் மகளும் இளையதம்பி கதிரவேலு அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான நடேசலிங்கம், பரமலிங்கம், பாலசிங்கம், சண்முகலிங்கம், ஆகியோரினதும் சரஸ்வதி (பிரான்ஸ்), குணலட்சுமி (கொழும்பு), ரேவதி (ஜேர்மனி), சந்திரமதி, சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின் தாயாரும் சரஸ்வதி (மீசாலை), காலஞ்சென்ற நடேசபிள்ளை, சத்தியமூர்த்தி, தியாகராஜா (ஜேர்மனி), தங்கராணி (மட்டுவில்), கலாவதி (ஜேர்மனி), தயாநாதன், உமாதேவி (அச்சுவேலி), விஜயசேனா (பிரான்ஸ்), திரிபுரசுந்தரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2004) சனிக்கிழமை இல. 459, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 459, K.K.S. றோட், யாழ்ப்பாணம். (30983)(30-36-16-18)

தகவல்: க.திரிபுரசுந்தரன் (மருமகன்).

### தங்கராசா தவசுதன்



(முத்துக்காடு, பிரதீப் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் தென் இந்தியா, காஞ்சிபுரம் மாவட்டம் முத்துக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா தவசுதன் 14.04.2004 புதன்கிழமை இந்தியாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு தங்கராசா மற்றும் தங்கராசா - தவமணிதேவியின் அன்பு மகனும் தவரூபன், தவசீலன், தவரூபி ரேகா (சுவிஸ்), தவசாந்தன் (இந்தியா), தனுசாந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினம் குணவதி, இரத்தினம், காலஞ்சென்ற பொன்னுத்துரை, திருமதி பொன்னுத்துரை இரத்தினம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெயாதரன், தவரூபன், இராசாத்தி, விஜி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2004) சனிக்கிழமை சென்னை BECZENT நகரில் மு.ப. 11 மணிக்கு நடைபெறும். துக்க நிகழ்வு நீர்வேலி வடக்கில் அன்னாரின் இல்லத்தில் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (30978)(30-16-18-36)

தகவல்: தங்கராசா தவசீலன் (சகோதரன்).

### திருமதி சரஸ்வதி கனகரத்தினம்

காரைநகர், விளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கனகரத்தினம் நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - காசுவதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் அமரர் C.S. கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் புவனேஸ்வரி, சிவபாதசுந்தரம் (சிவா றேடர்ஸ், C.S.K.S. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), சரோஜினிதேவி, காலஞ்சென்ற திலகவதி மற்றும் கனகசுந்தரம் (C.S.K.K., ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற S.K.பாலசுப்பிரமணியம் மற்றும் ஜி.இராஜேந்திரம், காலஞ்சென்ற K.K.K.பேரின்பநாயகம் மற்றும் S.நமசிவாயம், மோகனாம்பிகை, மனோன்மணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயக்குமார், சுகந்தி, குருபரன், இராஜேஸ்வரன், சாந்தி, ஜெயந்தி, வசந்தி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் ஸ்ரீதரன், ஸ்ரீதேவி, யுகராஜன், ஜீவிதா, தவராசா, தினேஸ்குமார், யோகேஸ்வரன், அனுசா, கோகுலன், பவானி, தயானி, குருபரன், குமரன் ஆகியோரின் பேர்த்தியும் காத்திகா, பிரிந்தா, சஞ்சிகா, தஞ்சுதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58/1, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (30976)(30-16-18)

தகவல்: பிள்ளைகள்.

## அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இராமநாதன் நுண்கலைக்கழகம் - கலைப்பீடம்**

இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறை, நடனத்துறை மூன்றாம், நான்காம்வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் 19/04/2004 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும். முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் யாவும் 28/04/2004 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும். இசை, நடன மாணவர்கள் அனைவரும் குறிப்பிட்ட திகதியிலிருந்து விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

பதிவாளர், 16/04/2004. (சி-34521)(35)

## கண்ணீர் அஞ்சலி



### கந்தப்பச்செட்டியார் அசோகன்

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தர்மகர்த்தா குடும்பத்தின் வாரிசாய் எம்முற்ற நண்பனாய் உறவாடி 16.04.2004 வெள்ளிக்கிழமை வைத்தீஸ்வரன் பாதம் அடைந்த செம்மல் அசோகனுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

யூரோவில் ஊழியர்கள். (சி-34519)(36)

**கவிதை நூல் வெளியீடு**

திரு.த.ஜெயசீலன் அவர்களின் "கைகளுக்குள் சிக்காத காற்று"
இடம்:.நாவலர் கலாசார மண்டபம்
காலம்:17.04.2004 சனி மாலை 4.00 மணி.
அனைவரும் வருக! (30692)(17)

கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு
யசோ, 35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**லஷ்சுமி இணுவில்**





அஜித்குமார், ஜோதிகா, விவேக், சிவகுமார் இன்னும் பலர் நடிப்பில்
பூவெல்லாம் உன்வாசம்
புதிய நேரம்: 11.00, 3.00, 6.30, இரவு 9.30 (30971)(12)

**நிறஞ்சனாஸ் சங்கானை**
கமல் (இருவேடம்), மனிசா நடித்த
இந்தியன்



காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.) இரவு 8.45 இற்கு
Maid in Manhattan (ஆங்கிலப்படம்) (C/34420)(12)

**ராஜா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா நடித்த



கில்லி
10.30., 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(ரீலஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம். (C/2451761)(22)

**நாகம்ஸ் சுன்னாகம்**



3 ஆவது வெற்றிவாரமாக...
விஜய், சிம்ரன், விவேக், நடித்த
உதயா
18.04.2004 வரை
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.) (44130)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்மணி குழந்தைவேலு

யாழ்.கொழும்புத்துறை மேற்கு, செட்டிய தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் 21, ஜானகி ஒழுங்கை, கொழும்பு - 04 ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி குழந்தைவேலு 15-04-2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகப்பிள்ளை குழந்தைவேலுவின் (வன பரிபாலன இலாகா) அன்பு மனைவியும் சரஸ்வதி (France), நடராஜா (Canada), தியாகராஜா (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உதவி முகாமையாளர் - France), ராஜேஸ்வரி (இந்திரா கொழும்பு), லட்சுமி தேவி (France), மகேஸ்வரி (Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேந்திரம் (France), பத்மாம்பிகை (Canada), அன்னராஜா (Colombo), விஜயரட்ணம் (Fra nce), தெய்வேந்திரன் (ஓட்டோ கூல் எஞ்சினியர்ஸ் Colombo) ஆகியோரின் மாமியாரும் ஜாழினி, அஷோக்கா, குமணா, நிஷான், துஷான், ஷமீனா, அமித்தா, அனுசியா, சுகந்தினி, சுகந்தன், சுதர்சன், சுஜேந்திரன், உமேஸ்கரன், நிதர்ஷா, கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2004) சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

21,ஜானகி ஒழுங்கை, கொழும்பு. (30972)(36-18-16)

தகவல்: K.தியாகராஜா(மகன்).

### செல்லம் திரவியம்

கந்தவனம், பொலிகண்டியை வசிப்பிடமாகக் கொண்ட செல்லம் திரவியம் நேற்று(16-04-2004) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லம் ஆச்சிமுத்துவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருமதி திக்கம் செல்லையாபிள்ளை ,இரத்தினம் இராசக்கோன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தவனம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (சி-34493)(36-18-16)

தகவல்: பார்ப்பதி(இராயர்), யோகாம்பிகை திருமதி சிவா இராமநாதன்.(மருமக்கள்).

### திருமதி அருளப்பு கிளாறம்மா



யாழ்ப்பாணம், ஸ்ரேசன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருளப்பு கிளாறம்மா 15.04.2004 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்புவின் அன்பு மனைவியும் ராணி, காலஞ்சென்ற திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிமியோனின் அன்பு மைத்துனியும் பெனடிக்ற் (பிரான்ஸ்), டொமினி, மெற்றில்டா, மேரி யோசேப்பின் டொனாஸ் (பிரான்ஸ்) , டொனால்ட் ஆகியோரின் பாசமிகு தாயாரும் லூர்து மலர், புஸ்பராணி, என்சிலி மகாராஜா, லூர்து நாயகம் ,மேரிஇராஜவதனா, ஆகியோரின் அன்பு மாமியும் விஜி, சுஜி, யொன்சிகா, ஜான்சன், ஜான்சி, கௌசிகன், கௌசீலன், கௌறீசன், ஜெனா, சாளினி, நிறோஜி, ரொய்சியா, ஜீவிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64/1 B, ஸ்ரேசன் ஒழுங்கை , யாழ்ப்பாணம். (30966)(38-16-18)

தகவல: அ.டொமினி (மகன்).

### திருமதி கந்தசாமி பாக்கியம் (தவராசா)



துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி கந்தசாமி (தவராசா) பாக்கியம் அவர்கள் 13.04.2004 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கந்தசாமி (தவராசா) அவர்களின் அன்பு மனைவியும் பாஸ்கரன், ஜெகதீஸ்வரன், ஜெசிகலா, துஷாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தன், ராஜி, மைதிலி ஆகியோரின் அன்பு மாமியாரும் அம்சன், ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, துன்னாலை தெற்குக் கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் வேருண்டை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை தெற்கு, கரவெட்டி. (30973)(38-16-18)

தகவல்: பாஸ்கரன் (மகன்), வசந்தன் (மருமகன்).

### திருமதி பவளம் நவரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - கட்டுவன் வர்த்தலைவிளான்)

கட்டுவன், வர்த்தலைவிளானைச் சேர்ந்த திருமதி பவளம் நவரத்தினம் 15.04.2004 வியாழககிழமை காலமானார்.

அன்னார் சு.நவரத்தினத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும நாககுமரனின் (கனடா) அன்புத் தாயாரும் லீலரஞ்சனியின் மாமியாரும் சிவபாலனின பேர்த்தியுமாவார். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சு.தளையசிங்கம்(இளைப்பாறிய அதிபர்) குப்பிளான் றோட்,குறும்பன்,. ஏழாலை மேற்கு, ஏழாலை. (30958)(36-16-18)

தகவல்: சு.நவரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்) கணவர்.

### செல்லையா அழகேஸ்வரசாமி

(ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர்)

அல்வாய் கிழக்கைச் சேர்ந்த செ.அழகேஸ்வரசாமி நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி தங்கம்மாவின் அன்புக் கணவரும் திருமதி சறோஜாதேவி, தேவச்சந்திரன் (அதிபர்,யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம்), ஞானச்சந்திரனீ (கிராம அலுவலர்), சிறிகரன்(கோட்டக்கல்வி அதிகாரி, வவுனியா வடக்கு), காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் திருமதி இலங்காதேவி (யாழ்.போதனா வைத்தியசாலை) , திருமதி ரதிதேவி (அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை, திருமதி விஜயா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தவசுப்பிரமணியம், விஜயராணி, சாந்தரூபினி, லோகேஸ்வரி, தர்மராசா, சிவராசா,பாலேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.04.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கருகம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/34494)(38-16-18-36)

தகவல்: அ.தேவச்சந்திரன் (மகன்).

# பெருமளவு நிதியைச் சுருட்டினார் கருணா!

## வங்கிகளில் கோடிக்கணக்கில் வைப்புப்பற்றி தகவல்கள்

புலிகளின் நடவடிக்கையை அடுத்து ஓடித்தப்பித் தலைமறைவாகியுள்ள கருணா, பெரும்தொகை நிதியையும் சுருட்டியிருக்கிறார் என இப்போது தகவல்கள் வெளியாகிவருகின்றன.

இவ்விடயம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சர்வதேச ரீதியாக இலங்கையிலிருந்து இயங்கும் தனியார் வங்கிகளில் கருணா தனதும் தனது சகா ஒருவரினதும் பெயர்களில் கோடிக் கணக்கான ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது என தனது பெயரை குறிப்பிட விரும்பாத வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த இருநபர்களின் பெயர்களில் தனியார் வங்கிகளில் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்தில் லட்சம் லட்சமாக இந்தக் கணக்குகளில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளன. கருணா மற்றும் அவரது நெருங்கிய சகா ஒருவரின் பெயரிலேயே இந்த நிதி வைப்பிலிடப்பட்டிருக்கிறது என்பது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

வைப்பிலிடப்பட்ட பணத்தில் ஒரு தொகையான பணம் 'கிரடிட் கார்ட்' மூலம் மலேஷியாவில் உள்ள ஒருவரின் கணக்குக்கு மாற்றப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

அண்மைக்காலத்தில் மட்டும் சுமார் 70 லட்சத்துக்கும் அதிகமான தொகை வைப்பிலிடப்பட்டுள்ளது. இது மட்டக்களப்பு வர்த்தகர்களிடம் கப்பமாகப் பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

கருணாவுக்கு நிதி விடயங்களில் வலதுகரமாகச் செயற்பட்ட புவனேசன் என்பவரின் பெயரிலேயே சில வங்கிக் கணக்குகள் இயக்கப்பட்டன என்றும் இந்தக்கணக்குக்கு பெருமளவு நிதி மாற்றப்பட்டது என்றும் கூறப்பட்டது.

கருணாவின் நிதி மோசடி பற்றிய தகவல்கள் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்குத் தெரியவந்ததை அடுத்து புலிகளின் நிதிப்பிரிவும் உளவுப்பிரிவும் அது பற்றி துருவித்துருவி விசாரிக்கத் தொடங்கின. அதையடுத்தே - தனது குற்றங்கள் அம்பலமாகிவிடும் என்ற அச்சத்தில் கருணா புலிகளின் தலைமையை விட்டுப் பிரிந்து தனித்துச் செயற்பட முடிவெடுத்தார் என்று கூறப்படுகிறது.

உளவுப்பிரிவாலும் நிதிப் பிரிவினாலும் தனது குற்றங்கள் அம்பலமாவதால் சீற்றமடைந்த கருணா அதன் காரணமாகவே உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானையும் நிதிப் பிரிவுத் தலைவர் செ.தமிழேந்தியையும் மாற்றவேண்டும் எனக் கோரினார் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-க)

### யாழ்.நகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களில் ஒருவர் என இனங்காணப்பட்ட ந.சத்தியலிங்கம் என்பவர் கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் வீட்டை விட்டுப் புறப்பட்டவர் என்றும் -

அப்பொழுது முதல் அவரைக் காணவில்லை எனவும் -

அவரது மனைவி பொலீஸ் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

தனது கணவர் காணாமற் போனமை தொடர்பாகத் தான் மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பொலீஸாரிடமும் முறையிட்டிருந்தார் எனவும் அவர் கூறினார்.

ந.சத்தியலிங்கம், வின்ஸர் தியேட்டரின அருகில் உள்ள தேநீர்க் கடையில் இரவு சுமார் 8.30 மணியளவில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தது பொலீஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகக் கூறப்பட்டது. கடையில் விடப்பட்டிருந்த ந.சத்தியலிங்கத்தின் சைக்கிளினை மறுநாள் செவ்வாய்க்கிழமையன்று காலையில் அவரைத் தேடிச் சென்ற மனைவி எடுத்துச் சென்றுள்ளார்.

மீட்கப்பட்ட சடலங்களை நேரில் சென்று பார்வையிட்ட யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சடலங்களை பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார். அத்துடன் இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் அனைத்து தரப்புக்களையும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (ம-9-6-7)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி முதற்கட்டமாக ஐ.தே.மு. சிரேஷ்ட உறுப்பினர்களான கரு ஜயசூரிய, டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டார முதலானோருடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைகளை அவதானமாகச் செவிமடுத்த ஐ.தே. தலைவர்கள் எந்தவிதமான பிடியும் கொடுக்காமல் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.தே.மு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் பின் தமது கருத்தை வெளிப்படுத்துவதாக கூறி நழுவிவிட்டனர் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை, முன்னாள் அமைச்சரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்க ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலருடன் ரணில் விக்கிரமசிங்க சார்பில் பேச்சு நடத்தி வருகிறார். சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட சுமார் 15 பேர் ஐ.தே.முவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

### டக்ளஸை அமைச்சராக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அக்கூட்டம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம், குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு - கிழக்கைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.

வரலாற்றில் முதன் முறையாக 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்து நாடாளுமன்றம் அனுப்பிய தமிழ் மக்களுக்கு தமிழத் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கூட்டத்தில் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து சபாநாயகர் தெரிவு, அரசியல் நிர்ணய சபை போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டது. இவை குறித்து 22ஆம் திகதி கூடும் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இறுதி முடிவெடுப்பதாகவும், இவை பற்றி வருகின்ற 20ஆம் விடுதலைப் புலிகளுடன் கலந்து பேசுவதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் பேசப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் சென்ற வருடம் ஐப்பசி 31ஆம் திகதி அன்று ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பிரேரணைகள முன்வைக்கப்பட்டு, அது விடயம் சம்பந்தமாக பேச்சுக்களை நடத்தி தீர்மானங்களை எடுப்பதற்கு ஏதுவாக திகதிகளை நிர்ணயிக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் கோரினர்.

ஆனால், அரசியலில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும், பேச்சுக்கள் ஆரம்பிககப்படுவதற்குத் தடையாக அமைந்தன.

இச்சூழலில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கில் தமிழ்ப் பேசும் மக்கள் முன்பாக வைக்கப்பட்ட முக்கியமான கோரிகை இதுதான் அதாவது, வடக்கு - கிழக்கில் ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்துவதற்கு தமிழ்மக்களின் ஆணையைக் தமிழ்க் கூட்டமைப்பு கோரி நின்றதாகும். இருபத்திரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ததன் மூலம் அவ்விதமான ஆணையை தமிழ் மக்கள் முழுமையாக வழங்கினார்கள்.

இவ்வாணைக்கமைய ஜனாதிபதியால் எதுவிதமான ஆக்கபூர்மான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அதேவேளை, தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக, தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஈ.பி.டி.பியைச் சார்ந்த டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமிழ் மக்களின் நலன்களுடன் சம்பந்தமுடைய அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதானது, தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்ட அவமானம் என்பதையும், நிதானமான சமாதான முயற்சிகள் சம்பந்தமாக ஜனாதிபதியினால் நம்பத்தகுந்த, ஆக்கபூர்வமான முயற்சிகள் ஏதேனும் ஏற்படுத்தப்படுமா என்ற பலத்த சந்தேகத்தையும், கேள்வியையும் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் இச்செயல் நல்லெண்ண நடவடிக்கைகளுக்கு மாறாக நமபிக்கையீனத்தையும் ஏற்படுத்துகின்றது. சமாதான முன்னெடுப்புகளில் ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கைகளையும், மேற்குறிப்பிட்ட அமைச்சு நியமனத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு வன்மையாகக் கண்டிக்கின்றது. இப்படித் தீமானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று மாவை சேனாதிராஜா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (ம-3)

### மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சலீம் ஆகியோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு நேற்று அவர்கள் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகர அலுவலகத்தில் இ.சேனாதிராஜா தனது பணிகளை ஆரம்பித்து, மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டார்.

இதேவேளை, மட்டக்களப்பில் தங்கியிருந்த முன்னாள் பொறுப்பாளர்களான நிசாம், துரை, திருமால், சர்மா, தாத்தா போன்றோர்கள் விடுதலைப்புலிகளிடம் மீண்டும் இணைவதற்கு தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. வாகரைச் சம்பவத்தின் போது காயமடைந்த தளபதி பாரதிராஜ் மீண்டும் புலிகளிடம் இணைந்துள்ளார்.

அன்னை பூபதியின் நினைவு தினத்தை எதிர்வரும் 19 ஆம் திகதி அனுஷ்டிக்க விரிவான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளும் அன்னையர் முன்னணியும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-க)

### ஜே.வி.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன மின்சகதி அமைச்சராக நியமிக்கப்படலாமென்றும் ஜனாதிபதி தம்வசம் வைத்திருக்கும் கல்வி அமைச்சு சுசில் பிரேம ஜயந்தவுக்கு வழங்கப்படக்கூடும் என்றும் நம்பப்படுகின்றது.

ஜே.வி.பிக்கு வழங்கப்பட்டுள்ள விவசாய அமைச்சின்கீழ் மகாவலித் திட்டம் கொண்டுவரப்படவேண்டுமென அவர்கள் கோரிவருவதையொட்டியே ஜனாதிபதி இந்த மற்றங்களை செய்ய முன்வந்திருக்கிறார் எனத் தெரிகின்றது. இந்த வகையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி முனனணி உறுப்பினர்களுக்கு இடையில் சமரசம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அமைச்சர்களின் பிரதி அமைச்சர்கள் பதவிகளும் மாற்றி அமைக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது. (ப)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து யோகராசா

(எழுதுவினைஞர், இலங்கைவங்கி, சாவகச்சேரி)



குடமியன், வரணியைப் பிறப்பிடமாகவும், 'அறிவகம்' பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து யோகராசா அவர்கள் நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் காலமானார்.

அன்னார் சரவணமுத்து - தையல்முத்துவின் அருமை மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் செழியன் (ஜேர்மனி), பவானி (பிரான்ஸ்), செந்தூரன், சேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி யோகேஸ்வரி கணேசபிள்ளை (சேவைககால ஆலோசகர், தென்மராட்சி வலயம் - கணிதம்), திருமதி இராசேஸ்வரி, திருஞானசிவம் (அதிபர்-யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்), திருமதி மகேஸ்வரி சண்முகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அறிவகம்'* (30982)(38-16-18-30) தகவல்:
*பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.* மனைவி, பிள்ளைகள்.

### திருமதி பொன்னம்பலம் செல்வபாக்கியம்

கிளானை, கொல்லங்கலட்டியை நிரந்தர வதிவிடமாகவும் பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் மத்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்வபாக்கியம் அவர்கள் நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை மாவைக்கந்தன் அடியைச் சென்றடைந்துவிட்டார்.

அன்னார் மார்க்கண்டு - மனோன்மணியின் அன்பு மகளும் சின்னையா, தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகளும் பொன்னம்பலத்தின் (வெற்றி) அன்பு மனைவியும் பசுபதியம்மாவின் பாசமிகு அக்காவும் காலஞ்சென்ற இராசபூபதி, இரத்தினபூபதி, காலஞ்சென்ற தில்லைநாதன், சிதம்பரநாதன் மற்றும் வெற்றிவேலுவின் அன்பு மைத்துனியும் பிறேமலதா (கிளி), ஜீவலதா (கனடா), கேமலதா (LIC முகவர்) புஸ்பலதாவின் அன்புத் தாயாரும் புவனேந்திரன், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரதன், கஸ்தூரி, ஜெயராமின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.04.2004) சனிக்கிழமை நணபகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி,* தகவல்:
*கோப்பாய் மத்தி,* சி.பொன்னம்பலம்.
*கோப்பாய்.* (95199)(38-16-18-30) (கணவர்).

### திருமதி இரத்தினநாயகி கதிரவேலு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினநாயகி கதிரவேலு அவர்கள் 15.04.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு செட்டியாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுரேஸ்குமார், திருமதி கௌரி மதிவண்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*187/34, ஆஸ்பத்திரி வீதி,* தகவல்:
*யூனியன் லேன்,* கௌரி, மதிவண்ணன்
*யாழ்ப்பாணம்.* (30988)(30-16-18-30) (மகள், மருமகன்)

### தோரையன் வெற்றியன்

கேணியடி, இமையாணன கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட தோரையன் வெற்றியன் அவர்கள் நேற்று (16.04.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆரியின் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, தங்கம், சின்னமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகம்மா, அழகம்மா, ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாராயணசாமி, சிவக்கொழுந்து (சிவா பொடி வேக்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நித்தியானந்தம் (சுவிஸ்), ரேனுகா (ஜேர்மனி), சிவதாரணி (லண்டன்), அருள்தாஸன (லண்டன்), ரதி (சுவிஸ்), பிரேமலதா (ஜேர்மனி), ராதை, ரூபானந்தன் (கண்ணன்), றமா (கல்வியியல் கல்லூரி - யாழ்ப்பாணம்), கிருபானந்தன் (அம்பி), நிர்மலதாஸன் (நிமல்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2004) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி,* தகவல்:
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.* (34524)(36-16-18-30) - குடும்பத்தினர்.


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**
**(Jaffna University & Peradeniya University)**

G.A.Q. | 1st in Com. | B.A. | B. Com.

**Minimum Requirement: G.C.E. A/L 3 Passes**
**வகுப்புகள் ஆரம்பம்: 19-04-2004**

இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு வகுப்புகள்
**ஆரம்பம்: 19.04.2004 மாலை 3.00 மணி.**

Further Details
**Director**
**Uduvil Girls' College Undergraduate Dept.,**
**Uduvil, Chunnakam.**
**T.P.: 222 3300**
(C/34492)(30)

## ஸ்கிறீன் பிறிண்டிங் பயிற்சி வகுப்பு

எம்மிடம் பதிவு செய்தவர்கள் 19.04.2004 அன்று காலை 9 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி ஆலயம் முன்பாக உள்ள எமது பயிற்சியகத்திற்கு சமுகந்தரவும்.

★ புதிய பதிவுகள் ஏப்ரல் 19 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

உங்கள் தொடர்புகட்கு:

**வெப்சைட் பதிப்பகம்**
மாதா கோயில் அருகில்
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.
தொ.பே.: 077 625 7876
(30949)(18)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.